சிறுகதை மாதஇதழ்

# மஞ்சரி

29



ஆசிரியர்: மு.தயாளன்

இதழ் 29 மார்கழி 2022 £4.00

வளர்ந்த , வளரும் படைப்பாளிகளுக்கான களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்காளர்கள்



தர்சித் ராகுல்
பக்கம் 7
இலங்கை



அலெக்ஸ் பரந்தாமன்
பக்கம் 10
இலங்கை



பேராசிரியர் மௌனகுரு
பக்கம் 18
இலங்கை



விமல் பரம்
பக்கம் 19
இலங்கை



கமலினி கதிர்
பக்கம் 25
இலங்கை



தீபதிலகை
பக்கம் 26
இலங்கை



பேராசிரியர் யோகராசா
பக்கம் 31
இலங்கை


20 % கழிவு

## SKM BOOKS FOR SALE

20 % கழிவு




300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 200 ரூபா 300 ரூபா 350 ரூபா




200 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 400 ரூபா

எனது எல்லாப்புத்தகங்களும்
சிறுகதை மஞ்சரிகளும்
Amazon Kindle இல் உள்ளன.
www.amazon.co.uk/ebooks இல்
Type M.Thayalan

India 400 Rs
London £5 Can/Ame $10
Europe 10 Euro
மேற்குறிப்பிட்ட விலைகளிலிருந்து 20% கழிவில் பெறலாம்

இலங்கையில் உள்ளவர்கள்
Commercial bank Account No: 8370042817
மற்றைய நாடுகளில் உள்ளவர்கள் உங்கள் விருப்பத்தை skmbooks50@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்


**வாசிப்பதனால் மனிதன் பூரண மனிதனாகிறான்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. KUGHAN
72, 2nd LANE
ANANDAPURA
TRINCO
0471960160



# வேதனைமேல் வேதனை

ஒரு இனத்தை இல்லாமல் செய்ய வேண்டுமாயின் அதன் பண்பாட்டு விழுமியங்களை இல்லாமல் செய்துவிடவேண்டுமென்பது உலக விதி. பண்பாட்டு விழுமியங்கள் அற்றுப்போகும்போது அந்த இனத்தின் அடையாளம் காணாமலாக்கப்படுகிறது.

இந்தச் செயற்பாட்டினை விழித்துக் கொண்டிருக்கும் எந்த இனத்தின்மேலும் செய்யமுடியாது. அவர்களை உறங்கு நிலைக்குக் கொண்டு போகவேண்டியது எதிராளியின் செயலாகிறது. இப்பொழுது தமிழ்மக்கள் மீது நடைபெறும் நிகழ்வுகள் இத்தகையனவே.

'இலங்கை நாட்டில் போதைப் பொருள் பரவுகை தாராளமாக நடக்கிறது. அதுவும் வட பகுதியில் கூடுதலாகவும் வட பகுதியே போதைப் பொருட்களின் தலைமையிடமாகவும் மாறியுள்ளது.' இந்தக் கூற்றினை பாராளுமன்றத்தில் கூறியவர் ஒரு அமைச்சர்.

திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் போதைப் பொருட்கள் யாழ்ப்பாணத்தில் மாணவர் மத்தியில் விநியோகிக்கப்படுகின்றது.

இளைய தலைமுறை மீண்டும் எழுந்துவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் மத்தியில் போதைப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. இந்த விநியோகத்திற்கு அவர்கள் முகவர்களாக வைத்திருப்பவர்களும் தமிழர்களே என்பது தவிர்க்க முடியாத உண்மையாகும். போரினால் சலிப்படைந்து எதுவுமே அற்றவர்களாக சொந்த நாட்டிலேயே ஏதிலிகளாக மாறிப்போன இனம் சலிப்பிலிருந்து மீண்டுவிடக் கூடாது என்பதற்காக பணத்தைக் கொண்டு அவர்கள் மூலமாகவே போதைப் பொருள்களை விநியோகிப்பதில் பெரும்பான்மைச் சதிகாரர்கள் வெற்றியடைந்து கொண்டிருக்கிறார்கள்.

தினமும் ஒரு பெண்கள் மீதான வன்முறை, வாள்வெட்டுகள் போன்ற துயரமான சம்பவங்கள் எமது மண்ணில் தாராளமாக நடந்து கொண்டிருக்கின்றன.

எல்லாவற்றையும்விடத் துயரமான சம்பவம் இவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டிய அரசியலாளர்களும் முகவர்களாக மாறிப்போனதுதான்.

தமிழ்மக்களைப் போதையால் மயங்கவைத்து அவர்கள் செயலற்றுப்போன நிலையில் காணிகளைச் சூறையாடுவதும் புத்த சிலைகளைத் தமிழ்ப்பகுதிகளில் வைத்துத் தமிழ் இனப்பரம்பலை குழப்புவதுமான செயற்பாடுகளை துரிதமாக பெரும்பான்மையின அரசு செய்து வருகின்றது.

தமிழ் மக்களும் தமிழ் அரசியல் தலைவர்களும் விழித்துக் கொள்ள வேண்டிய தருணம் இது. இப்போது விழித்தெழுந்து ஆவன செய்யாவிட்டால் எப்போதும் விழித்தெழ முடியாது என்பதை மனதில் வைத்திருங்கள். காலங்கடந்து கண்விழித்தாலும் பிரயோசனமில்லை.

சுயநல எண்ணங்களை தூர எறிந்துவிட்டு எல்லோரும் ஒரு குடையின்கீழ் ஒன்று திரள வேண்டியது காலத்தின் கட்டாயம்.

மக்களுக்காக வாழுங்கள்! மக்களோடு ஐக்கியமாகுங்கள்!

**மு. தயாளன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்...


**1** **வேதனை மேல் வேதனை**
ஆசிரிய தலையங்கம்

**2** **உள்ளடக்கம்**

**3** **கம்பி இல்லா வீணை**
தியா

**7** **கள்ளத்தோணி**
சுரேந்திரன் தர்சித் ராகுல்

**10** **காலசூட்சுமம்**
அலெக்ஸ் பரந்தாமன்

**13** **பரிசு**
கலாபூசணம் தம்பிலுவில் ஜெகா

**15** **கரும்பலகை (தொடர்கதை)**
மு.தயாளன்

**18** **மலையகத்தின் அடையாளம்**
பேராசிரியர் மௌனகுரு

**19** **செல்வம்**
விமல் பரம்

**23** **படிப்பும் பாதிப்பும்**
அலெக்ஸ் பரந்தாமன்

**25** **நெஞ்சைத் தொடும் உண்மை**
கமலினி கதிர்

**29** **எல்லை மீறும் ஆசை**
எம்.எம்.எம் இப்றாகீம்

**30** **மஞ்சரி ஒரு பார்வை (28)**
பேராசிரியர் செ. யோகராசா

**32** **சிறுகதை எழுதுவது எப்படி?** ( தொடர் கட்டுரை)
மு. தயாளன்


**சிறுகதை மஞ்சரி 27 இன் சிறந்த இருகதைகள் சிறுகதைகள்**

1. நசுங்கிப்போகும் உணர்வுகள் - கமலினி கதிர்
2. ஜன்னல் - மனால்
3. தூவானம் - நிலாவளியூர் கெஜ-தர்மா

## எழுத்தாளர்கள் கவனத்திற்கு:

மஞ்சரியில் எழுதும் இலங்கையில் வதியும் எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக 1000 ரூபா தரப்படும் என்று கூறியுள்ளோம். இது கிடைக்காதவர்கள் தயவுசெய்து உங்கள் வங்கிக் கணக்கு விபரங்களை எமக்கு அறியத்தரவும். ஒவ்வொரு தடவை நீங்கள் கதையை அனுப்பும்போதும் இந்த விபரங்கள் கதையுடன் இணைக்கப்படவேண்டும். (ஆ-ர்)

**அன்பான வேண்டுகோள்.**

அன்பு நிறை எழுத்தாளர்களே உங்கள் படைப்புகளை தட்டச்சுச் செய்யாமல் அனுப்பினால் கறுத்த மையினால் தெளிவாக எழுதி அனுப்புங்கள்.


**நன்றிக்குரியவர்கள்:**

திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர், ஓவியர் கைலாச நாதன்.


**1000 பேரை இணைப்போம்......**

தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.
லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


**அட்டை வடிவமைப்பு:** ரமணன் நற்குணதயாளன்
**அட்டைப்படம் :** சரண்யா தனபாலசிங்கம்
**ஓவியர்கள்:** G. கைலாசநாதன்

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649


**சந்தா விபரம்:**
**Srilanka:**900Rs/Year
Bank detail : Mrs Sasikala Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year
**Den/Swiss/Ger:** 80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan, Barclays, Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649


Luxmi Publication
இலக்சுமி பிரசுரம்

**சிறுகதை மஞ்சரி,**
**ஒரு இலக்சுமி பிரசுரமாகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியா

# கம்பி இல்லா வீணை

நேர்முக பரீட்சைக்குச் சென்று வீட்டுக்கு வந்த கார்த்திகா அத்தாட்சிப் பத்திரங்கள் அடங்கிய பைலை (கோப்பு) மேசைமீது எறிந்துவிட்டு, குமுறி குமுறி அழத் தொடங்கினாள். மகள் தேம்பி அழும் நிலையைக் கண்ட சாரதாவுக்கு எல்லாமே புரிந்தது. ஆம் இன்றும் வழக்கம் போல் தான் நடந்திருக்கும், கோப்புகளைப் புரட்டிப் பார்த்து விட்டு எல்லாம் சரியாக உள்ளது. சான்றிதழ்களும் மிகவும் சிறப்பாகவும் தகுதியாகமுள்ளது. ஆனால் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் தந்தையின் பெயர் இல்லாமல் இடைவெளி இருக்கிறபடியால் வேலையில் சேர்த்துக்கொள்ள முடியாது என்று கூறி திருப்பி அனுப்பியிருப்பார்கள். பாவம் இவள் யாரோ செய்த தப்புக்கு தண்டனை அனுபவிக்கிறாள். வீணைக்குத் தெரியாதுதானே தன்னை செய்தவன் யார் என்று! சாரதா, மகள் கார்த்திகாவின் அழுகையை கண்டும் அவள் அருகில் சென்று ஆறுதல் கூட சொல்ல முடியாமல் மௌனமாக அவளும் அழுதாள்.

நான் இளமையில் அறியாமலும் என் பருவ உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமல் செய்துவிட்ட ஒரு தவறினால், ஒரு குற்றமும் செய்யாத என் மகள் இன்று எத்தனை துன்பங்களையும், அவமானங்களையும் சந்திக்க நேரிடுகிறது. அவமானம், துன்பம் மட்டுமா, அவளின் எதிர்காலமும் அல்லவா கேள்விக் குறியாகவுள்ளது. அந்த ஒரு நிமிடம் என் வாழ்வையும் சிதைத்து எத்தனை பெரிய பள்ளத்தை ஏற்படுத்திவிட்டது. மனித வாழ்வில் ஒரு நிமிடம் என்பது மிக மிக குறைந்த நேரம்தான். ஆனால் நேரம் குறைவான போதும் அதன் தாக்கம் எத்தனை வாழ்நாளில் எத்தனை பெரிய பாதிப்பை உண்டாக்கி விடுகிறது.

சாரதா குற்ற உணர்வோடு மகளின் முகத்தைக் கூட நிமிர்ந்து பார்க்க தைரியம் இல்லாமலும் அவளின் அழுகையை நிறுத்தி ஆறுதல் சொல்ல முடியாமல் தவித்தாள். தான் இன்று தன் பெற்ற மகளின் முன்னே குற்றவாளியாக நிற்பதற்கு காரணமாக பழைய சம்பவங்கள் சின்னத்திரை டிராமா போல் மணக்கண் முன்னே ஓடுகிறது. பல வருடங்களுக்கு முன் நடந்த அந்த கசப்பான சம்பவத்தை பசு இரை மீட்டுவதைப் போல் மீட்டிப் பார்க்கிறாள்.

அப்பா சின்ன வயதிலே இந்தியாவுக்கு போய் தவறி விட அம்மா அண்ணாமார்கள் இருவர், அக்காமார்கள் இருவர், தங்கை என்று சகோதரர்களின் பாசத்துடன் இளமைக் காலம் மூத்த அண்ணாவின் பராமரிப்பில் கவலையின்றி கழிந்தது. அது தங்கை கவிதாவும் சாரதாவும் சகோதரிகளைப் போல் அல்லாமல் இரு தோழிகளைப்போல் பழகி வந்தனர். சாரதா கறுப்பு நிறம் என்றாலும் கவர்ச்சியானவள். பொறுமையும் அடக்கமும் ஒருங்கே அமைந்தவள். கவிதா வெள்ளை நிறம் துடுக்கானவள் வீட்டில் கடைக்குட்டி என்றபடியால் மிகவும் செல்லமாகவும் வளர்க்கப்பட்டாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியா

இப்படியாக கவலையின்றி வீட்டில் இருந்த வேளையில் அண்ணாமார்கள். அக்கா இருவரும் திருமணம் முடிந்து போய்விட அம்மாவின் விருப்பப்படி சாரதாவுக்கு மாப்பிள்ளை தேடினார் அண்ணன். இப்படியாக பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை விக்னேஸ்வரன் என்பவர் சாரதாவை விட தங்கை கவிதாவையே தனக்கு பிடித்துள்ளது என்று கூறி அவளை திருமணம் முடிக்கவே விரும்புகிறேன். சம்மதம் என்றால் சொல்லி அனுப்புங்கள் என்று வந் தவர்களுடன் விடை பெற்றார். வெள்ளைத் தோலை கண்டு மயங்கும் ஆண்களிடையே விக்கேனஸ்வரன் மட்டும் விதி விலக்கா? அவரும் கவிதாவின் வெள்ளை நிறத்தில் மயங்கி விட்டார். வீட்டில் அம்மா சகோதரர்களுடன் பெரியவர் களும் கலந்து பேசி சாரதா பொறுமையானவள் எதையும் புரிந்துக் கொள்வாள். எனவே அவளுக்கு வேறு மாப்பிளை பார்ப்போம். விக்னேஸ்வரன் விரும்பியப்படி கவிதாவை அவருக்கே திருமணம் முடித்து கொடுப்போம் என்று முடிவெடுத்தனர். சாரதாவோ வெளியில் ஒன்றுமே கதைக்க முடியாமல் உள்ளுக்குள்ளே அழுது தீர்த்தாள். விக்னேஸ்வ ரனை எண்ணி வெறுப்பு கொண்டாள். பெண் என்றால் எவ்வித உணர்ச்சியுமில்லாத ஒரு பொம்மையைப் போல் என்று எண்ணியகாலமது. எனவே பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை விரும்பியபடி கவிதாவுக்கும் விக்னேஸ்வர னுக்கும் திருமணம் நிச்சயயிக்கப்பட்டு திருமணம் இனிதாக கணவருடன் புகுந்து வீட்டுக்கு சென்றாள்.

தங்கை கவிதாவின் திருமணத்தின் பின் சாரதா தனிமையில் தள்ளப்பட்டாள். நான் மூத்த பெண் இருக்க திடீரென பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை, தங்கை கவிதாவை விரும்பி உடனே திருமணமும் முடிந்து அவள் திடுதிப்பென்று என்னை விட்டு பிரிந்து கணவன் வீட்டுக்கு சென்று விட்டாள். தான் ஒதுக்கப்பட்டது போல் ஒரு ஆதங்கம் மனதில் ஏற்பட்டது. அவள் தாயிடம் கூட பேசுவதை தவிர்த்தாள். சதா யோசனையுடன் காணப் பட்டாள். இப்படியிருக்கும் வேளையில் சாரதாவுக்கு தங்கை கவிதாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

அன்புள்ள அக்கா!

நான் நலம் நீங்களும் அம்மாவும் அக்காமார்கள். அண்ணாமார்கள் எல்லாம் சுகமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நான் திடீரென்று கல்யாணம் முடித்து கணவருடன் இங்கு வந்தபோதும் உங்களை விட்டு பிரிந்து வந்தது எனக்கு மிகவும் வேதனையாகவுள்ளது. அக்கா என் கணவர் மிகவும் நல்லவர். அன்பானவர். எனக்கு இப்படியொரு கணவர் அமைந்தது என் பாக்கியமே. என் மாமியும் ஒரு வாரம் எங்களுடன் இருந்து விட்டு ஊருக்கே போய் விட்டார். இவரும் வேலைக்குப் போனபின் தனிமை எனக்கும் போர் அடிக்கிறது. நீங்களும் அம்மாவும் அங்கு தனியாகத்தானே இருக்கிறீர்கள் எனவே அம்மாவுடன் இங்கு வரவும் கொஞ்சநாள் என்னுடன் இருந்து விட்டு போகலாம். உங்களுக்கும் இவரிடம் சொல்லி ஒரு நல்ல மாப்பிள்ளை பார்க்கலாம். உங்கள் வரவை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்.

என்றும் அன்புடன் தங்கை

கவிதா

தங்கை கவிதாவின் கடிதம் கண்ட சாரதாவுக்கு பாலை வனத்தில் பசும்சோலையை கண்டது போல சந்தோஷமாக இருந்தது. உடனே தாயிடம் காட்டினாள். முதலில் தயங்கிய தாயும் சரி தனியாக இருக்கும் சாரதாவுக்கு ஒரு மாறுதலாக இருக்கும் என்று எண்ணி மகளுடன் புறப்பட்டாள்.

தாயையும் சகோதரியையும் கண்ட கவிதா மிகவும் மகிழ்ந்து போனாள் இடையில் ஏற்பட்ட பிரிவு துயரை ஈடு செய்யும் வகையில் பாசத்துடன் பழகினார்கள். சிலவேளை கணவன்வீட்டுக்கு வந்ததைக்கூட கவனிக்காமல் அக்காவுடன் கதைத்துக் கொண்டு இருப்பதை கண்ட தாய் கூட இருவரையும் கடிந்து கொண்டாள். விக்னேஸ்வரன் கூட ஒரு நாள் என்ன கவி அக்கா வந்தவுடன் என்னை மறந்து விட்டாய் போல என்று கூறி சிரித்தான்.

சாரதா தங்கையின் வீட்டுக்கு வந்து இரு வாரங்கள் போனதே தெரியவில்லை. எனவே தாயார் கவிதாவிடம் " நாங்க வந்தும் இரண்டு கிழமையாய் போச்சு இனி நாங்க நாளைக்கு புறப்படுறம்" என்று கூறிய தாயிடம் "என்னம்மா அவசரம் அக்கா அங்க போயும் தனியாகத்தானே இருக்க போறா. இங்கேயே கொஞ்ச நாளைக்கு இருக்கட்டும். நான் இவரிடம் சொல்லி இங்கேயே மாப்பிள்ளை பார்க்க சொல்றன்" அப்படி ஏதும் மாப்பிள்ளை கிடைச்சா அண் ணாவிடம் சொல்லி அக்காவுக்கு இங்கேயே கல்யாணம் செய்திடலாம் என்று கவிதா கூறவும். நல்ல யோசனைதான் என்று எண்ணிய தாய் மகள் சாரதாவை கவிதாவின் வீட்டில் இருக்க விட்டு அவள் மட்டும் ஊருக்கு புறப்பட்டாள். ஆனால் அப்போது யாருக்கும் தெரியவில்லை தன் கணவனால் தன் அக்காவின் வாழ்வு மட்டும் அல்ல, தன் வாழ்வும் சீர்குலையும் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியா

ஆரம்பத்தில் கவிதாவும் விக்னேஸ்வரனும் ஒன்றாக இருக்கும் இடத்தில் சாராதா நிற்கவே மாட்டாள். வெட்கம் ஒரு புறமும் வேதனை மறுபுறமும் சேர ஓடிவிடுவாள். இதனைக் கண்ட கவிதா "என்ன அக்கா அத்தானைக் கண்டவுடன் ஓடி ஒளிந்துகொள்கிறீர்கள். முறைப்படி பார்த்தால் நீங்கள் தான் அவரிடம் அகப்பட்டு இருக்க வேண்டும் ஆனால் நான் தெரியாமல் மாட்டிக் கொண்டேன்" என்று கேலி செய்வாள்.

அதன் பிறகு இருவரும் சகஜமாக கதைத்து பழக தொடங்கினர். அதன் பின்னர் சந்தர்ப்பம் கிடைக்கும் போது சாரதாவை கிண்டல் பண்ணவும் தொடங்கியவன் அவளின் நல்ல குணங்களைக் கண்டு ஒருநாள் சாரதாவிடம் " சாரதா நான் அன்று பெண் பார்க்க வந்தபோது அவசரப்பட்டு முடிவெடுத்து விட்டேன் போல, நீங்க கருப்பாய் இருந்தபோதும் மிகவும் கவர்ச்சியாக இருக்கிறீர்கள். உங்களின் எல்லா செய்கைகளும் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு" என்று கேலியும் கிண்டலுமாக சொன்னான். இதைக் கேட்ட அவளின் பருவ உணர்வுகள் மெல்ல மெல்ல ஆட்டம் காண தொடங்கியது.

இதற்கிடையில் கவிதாவும் கர்ப்பம் அடைந்தாள் எனவே எந்நேரமும் தலைச்சுத்து வாந்தி என்று படுத்து விடுவாள். எனவே வீட்டு வேலைகளுடன் விக்னேஸ்வரனின் வேலைகளை கவனிக்கும் பொறுப்பும் சாரதாவை சேர்ந்தது. அதுபோல் அவர்கள் இருவரும் கதைக்கும் சந்தர்ப்பமும் அதிகம் உருவானது ஆனால் பிள்ளைப் பேறுக்காக காத்திருந்த கவிதா இதையெல்லாம் பெரிதாக எண்ணவில்லை. தன் கணவனை மிகவும் நம்பினாள். ஆனால் விக்னேஸ்வரன் ஏதோ நோக்கத்தோடே சாரதாவிடம் பழகினான். பேறுகாலம் நெருங்கவே கவிதா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள்.

தனிமையான நல்ல சந்தர்ப்பம் கிட்டவும் விக்னேஸ்வரன் சாரதாவை தன் வலைக்குள் சிக்க வைத்து தன் ஆசையை பூர்த்தி செய்து கொண்டான். அதன் விளைவு சாரதா கல்யாணம் ஆகாமலே கர்ப்பமானாள். இதைக் கண்ட கவிதா பேயாக மாறினாள் தன் சகோதரி திட்டமிட்டே தன் வாழ்வை நாசமாக்கிவிட்டதாக எண்ணி துடித்தாள். தன் சகோதரியை எதிரியாகக் கருதி ஒதுக்கினாள். தன் கணவனால் தன் சகோதரியின் வாழ்வு கருகிவிட்டது என்பதை உணராமல் சகோதரி மீது மட்டும் கோபமும் வெறுப்பும் கொண்டாள்.

விக்னேஸ்வரனின் கபட வார்த்தைகளில் தான் மதி மயங்கி இழக்கக் கூடாததை இழந்து விட்டதை எண்ணி ஊமையாக கண்ணீர் வடித்தாள். ஆண் செய்த தவறுக்கு அடையாளம் காட்டாத ஆண்டவன் பெண்ணுக்கு மட்டும் உடனே அடையாளம் காட்டும் ஆண்டவனையும் நொந்து கொண்டாள். வேதனை தீயில் வெந்த சாரதா தற்கொலைக்கு முயற்சி செய்தாள் ஆனால் அதுவும் தோல்வியிலேயே முடிந்தது. தவறு செய்யும் போது ஆணும் பெண்ணும் சேர்ந்து தவறு செய்தாலும் இந்தச் சமூகம் பெண்ணை மட்டும் ஒதுக்கி ஆணை ஏற்றுக் கொள்கிறது. சாரதாவை அவளின் தங்கை உற்றார் உறவினர்கள் ஒதுக்கினர். அவள் அந்த அளவுக்கு அதிகம் சோகத்தையும் சுமையையும் சுமந்து கொண்டு தன் தங்கையின் வீட்டை விட்டு வெளியேறி தன் தூரத்து உறவினர் ஒருவரின் வீட்டில் தஞ்சம் புகுந்தாள்.

சாரதாவின் நிர்க்கதியான நிலையைக் கண்ட அவர்கள் அரை மனதுடன் அவளை ஏற்றுக் கொண்டனர். அவள் இருக்கும் இடத்தை அறிந்த பின்னும் விக்னேஸ்வரனும் கவிதாவும் அவளைச் சென்று பார்க்கவும் இல்லை. யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இயற்கை தன் வழியே போய்க்கொண்டிருக்கும். எனவே சாரதாவுக்கும் குறிப்பிட்ட பிரசவவேதனை ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் அவள் பெண்ணாய் பிறந்து பட்டதெல்லாம் போதாது என்று அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

எதிர்காலக் கேள்விக்குறியுடனும் கையில் குழந்தையுடன் இறுகிய இதயத்துடன் வைத்தியசாலையிலிருந்த அவளுக்கு விக்னேஸ்வரனின் வரவு அதிர்ச்சியாகவும் ஒரு புறம் ஆனந்தமாகவும் இருந்தது. ஓ..... தன் குழந்தை மீது பாசம் வந்துவிட்டது போலும் அதனால் தன்னை வீட்டுக்கு அழைத்து செல்ல வந்துவிட்டாரோ என்று பலவிதமான எண்ணங்களுடன் குழம்பி போனாள்.

ஆனால் அவன் வஞ்சக எண்ணத்துடன் சுயநலத்துடனும் தான் வந்திருக்கிறான் என்பதை பின்புதான் அறிந்து கொண்டாள். வந்தவன் சாரதாவிடம் " என் பிள்ளைக்கு பெயர் வைத்துவிட்டாயா? என்று கேட்கவும் இல்லை என்று தலையசைத்தாள் சாராதா? சரி ஏதாவது பெயர் ஒன்று சொல் நான் போய் பிறப்பு சான்றிதழ் பதிவு செய்கிறேன் என்று சொல்லவும் சரி தகப்பன்தானே அக்கறையுடன் கேட்கிறார் என்று மகிழ்ந்த அவள்
கார்த்திகா என்று மகளுக்கு ஆசையாக வைக்கும் பெயரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியா

சொன்னாள்...சரி நான் எல்லாம் பார்த்துக்கிறேன் நீ ஒன்றும் யோசிக்காதே, இப்போது கவிதா மிகவும் கோபமாக விருக்கிறாள். நீ கொஞ்சநாள் அங்கேயே இரு கொஞ்சநாள் பொறுத்து உன்னையும், பிள்ளையையும் கூட்டிக் கொண்டு போறேன் என்று கூறிவிட்டு போய்விட்டான் அவன்.

மனதில் சுமையுடன் கையில் சுமையுடனும் மீண்டும் உறவினர் வீட்டுக்கு சென்றாள். கொஞ்சநாள் செல்ல அவர்கள் அவளையும் குழந்தையையும் அவளின் அண்ணன் விட்டுக்கு அனுப்பி வைத்தனர். அண்ணன் வீட்டுக்குச் சென்ற அவளுக்கு அண்ணனின் பாராமுகமும், அண்ணியின் சுடு சொற்களும் மிகவும் வேதனையை தந்தது. பனை ஏறி விழுந்தவனை மாடேறி மிதித்து போல் ஆகியது அவள் நிலை. எனவே இவளின் நிலையை உணர்ந்து சாராதாவின் அக்கா வந்து அவளுடன் அழைத்துச் சென்றாள்.

காலம் யாருக்காகவும் காத்திருக்காமல் விரைந் தோடியது. கார்த்திகாவும்இப்போது வளரத் தொடங்கினாள். இவள் எத்தனை நாளைக்கு இப்படியே தனியாக குழந்தையுடன் இருக்க முடியும் என்ற யோசித்த சாரதாவின் அக்காவும் அண்ணன்மார்களும் அவளுக்கு வேறு திருமணம் முடிக்க முடிவு செய்தனர். அக்காவின் கணவர் வேலை செய்யும் ஒருவர் அவள்பற்றி எல்லாவற்றையும் அறிந்து சாராதாவுக்கும் பிள்ளைக்கும் வாழ்வு கொடுக்க முன் வந்தார். கார்த்திகாவின் எதிர்காலத்தை முன்னிட்டும் விக்கேனஸ் வரனின் அலட்சிய போக்கும் சாரதாவை திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தன.

காத்திகாவை பாடசாலையில் சேர்க்க பிறப்பு சான்றிதழ் பத்திரம் வேண்டுமே என்று நினைவுக்கு வர தன் அக்கா மூலம் விக்னேஸ்வரனிடம் தொடர் கொண்டு கேட்க வும் அவர் மனசாட்சியே இல்லாத மனிதராக தகப்பனின் பெயரை குறிப்பிடாமல் வெறும் பிறப்புச் சான்றிழ் பத்திரத்தை மட்டும் அனுப்பியிருந்தார் அப்படியே பிறப்பு சான்றிதழ் பத்திரத்தை பாராமலே காத்திகாவை பாடசாலையில் சேர்ந்துவிட்டாள்.

கார்த்திகாவோ கல்வியில் மட்டுமல்ல எல்லா துறைகளிலும் மிகவும் சிறந்து விளங்கினாள். எனவே சான்றிதழ்கள் வழங்கும்போது பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்தது. அத்தோடு அவமானமும் ஏற்பட்டது. எனவே கார்த்திகா தன் சித்தப்பாவின் பெயரை கூறி சமாளித்து வந்தாள். இதனால் மனவேதனையும் குழப்பமும் கொண்ட கார்த்திகா தன் தாயிடம் கேட்டாள். அப்போது சாரதா மகளும் வளர்ந்துவிட்டபடியால் தனது கதையை கூறினாள். உண்மையை அறிந்த கார்த்திகா தனக்கு தொழில் கிடைக்க வேண்டுமானால் முதலில் இதை சரி செய்ய வேண்டும் என்று தன் தகப்பனுக்கு கோட் மூலம் கடிதம் அனுப்ப ஒரு சட்டத்தரணியை சந்திக்க முடிவு செய்தாள்.

இந்த மனித சமூகத்தில் தெரிந்தும் தெரியாமலும் இப்படி எத்தனையே குற்றங்கள் நடந்து கொண்டே தான் இருக்கிறது. தவறு செய்தவர்களும் மனசாட்சி இல்லாமல் மறைந்தே வாழ்கின்றனர். கம்பி அறுந்த வீணையைப்போல் வாழும் கார்த்திகாவுக்கு அதை நிவர்த்தி செய்ய முன் வருவார்களா? நீதி கிடைக்குமா? கம்பி மீண்டும் இணைக் கப்படுமா? காலம் தான் சொல்ல வேண்டும்.

குறிப்பு:

இக்கதை சில வருடங்களுக்கு முன் நடந்த ஓர் உண்மைச் சம்பவம் பெயர்கள் மட்டுமே கற்பனை.

புராணங்களில் அவதாரங்களைப்பற்றி
சொல்லியிருக்கிறது. மச்ச அவதாரத்திலிருந்து
கிருஸ்ண அவதாரம்வரை உள்ள பயணம்.
அதேமாதிரி ராமாயணத்திலிருந்து மகாபாரதம்
வரையிலும் இந்த உண்மைவிளக்கம்
எழுதப்பட்டுள்ளது. ராமனுக்குப்பிறகு கிருஸ்ணர்
அவதாரம் ஏற்படுகின்றது. இராமன் வாழ்க்கையின்
நெறிக்கு உட்பட்ட கடவுளின் அவதாரம். ஆனால்
கிருஸ்ணனோ லீலைகளின் அவதாரம். லீலை
என்றால் யோகம் என்பது பொருள். நீதி நெறிக்கு
அப்பால் உள்ள ஒரு முறைக்கு அது ஒரு அடையாளம்.
தொலைக்காட்சியில் இராமாயணத்தையும்
மகாபாரதத்தையும் பார்த்திருப்பீர்கள். அதைத்
தொகுத்தவர்களும் படித்தவர்களும் தம்மை
மறந்துவிட்டார்கள். ஆரிய பண்பாடு தழைத்து
ஓங்கியுள்ளது. இந்த மகாகாவியங்களின்
பொருள்பற்றி யாருக்கும் தெரியாது. எல்லோரும்
தேவதைகள், அம்பு தொடுக்கும் வானரங்கள்,
லவகுசா வாலிபர்கள் எல்லாவற்றையும் கடவுளின்
அம்சமாகக் கருதுகிறார்கள்.


**அர்த்தநாரீஸ்வரர் நாவலிலிருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேந்திரன் தர்சித் ராகுல்

# கள்ளத்தோணி



"தோ பௌத்தயெக்த பங்........ தொப்பினம் கள்ளத் தோணி யெக் வென்ன ஓனே......." (நீயெல்லாம் ஒரு பௌத்தனா....... நீ கள்ளத்தோணியாகத் தான் இருக்க வேண்டும்) இந்த வார்த்தைகள் அவன் காதுகளில் பழுக்கக் காய்ச்சிய ஈயத்தை வடிகட்டி வரைமுறை இல்லாது ..... வகை தொகையின்றி.... ஊற்றிக்கொண்டிருந்தது. அவனது பெயர் சாமி. வயது ஒரு அறுபது என்று அண்ணளவாய்ச் சொல்லலாம். வெள்ளை தாடி .... வழுக்கை தலை ....... பழங்காலத்து மூக்குக் கண்ணாடி என ஒரு தினுசாய் தான் இருப்பான். சில வருடங்களுக்கு முன்பு வரை ஹட்டனில் சொந்தமாக மளிகைக்கடை வைத்திருந்தவன் மொத்த சரக்கையும் கடையோடு சேர்த்து விற்றுத் தீர்த்துவிட்டு கொழும்பு பக்கம் வந்துவிட்டான். ஏன் ... எதற்கு ..... இது எல்லாம் யாருக்கும் தெரியாது அது அவனுக்கே வெளிச்சம். பத்தொன்பது இருபது வருடங்களுக்கு முன்னர் தன் மனைவியை கை விட்டு விட்டு உலக சுகங்களை துறந்து விட்டு ஒரு ஓரமாய் ஒதுங்கிக் கொண்ட புத்தன் அவன்.

"அவனைப் பொறுத்தவரை எந்த பொருளுடனோ அன்றேல் உயிருடனோ எமக்கு எந்த வகையிலோ ஏதோ ஓர் உரிமை இருக்கிறது என்றால் அவை எப்போதும் எமக்கு ஒரு சுமை மட்டுமே தான்.......அதனால்தான் தனக்கு சொந்தம் என்று சொல்லிக் கொள்ள இருந்த அவனது ஐம்பது வயது மனைவியையும் திருமண வயதை ஒத்த மகனையும் கை கழுவி விட்டு விட்டு தூரமாக ஒதுங்கிக் கொண்டான் அந்த கருப்பன்" என்றார்கள் சிலர்.

"இல்லை இல்லை அவனுக்கு கொழும்பில் ஒரு சின்ன வீடு இருக்கிறதாம் அதுதான் அங்கு போய் விட்டான் அந்த இந்தியாக்காரன்" என்றார்கள் இன்னும் சிலர்.

"யார் அந்த கள்ளத்தோணிப்பயல் தானே அவன் தலைமன்னார் வழியே தமிழ்நாட்டுக்கு எப்போதோ ஓடி விட்டானாம்........." என்றார்கள் இன்னும் கொஞ்ச பேர். ஆனால் உண்மை என்னவென்றால் இப்போது அவன் வெள்ளவத்தை நகரின் ஒரு குறுகிய ஒழுங்கையில் உள்ள மூன்று மாடி வீடொன்றில் மூன்றாவது மாடியில் வசித்து வருகிறான்.

எப்போதாவது இருந்து விட்டு அவனது மகன் பேசினால் பேசுவான் அதுவும் தொலைபேசியில் மட்டும்.... மனைவியோடு அது கூட இல்லை.

இப்படியாகக் கடந்து சென்று கொண்டிருந்த அவன் வாழ்வில் இன்றைய நாள் எப்போதும் போலத்தான் ஆரம்பித்தது. ஆனால் அவன் மகன் சொன்ன அந்த வார்த்தைகள் இத்தனை வருடமாய் எத்தனை பெரிய தவறை நாம் செய்திருக்கிறோம் என அவனை மீள சிந்திக்க வைத்து விட்டது...சிந்திக்க மட்டும் அல்ல கொஞ்சம் கண்ணீரை சிந்தவும் வைத்து விட்டது தான் உண்மை.

சாமி ஒரு கடின உழைப்பாளி..... எப்படிப்பட்ட உழைப்பாளி என்றால் கடையில் சிப்பந்தியாய் தொழில் பார்த்த போது மூட்டைகளை தூக்கிய அவன் தோள்கள் முதலாளியாய் மாறிய பின்னும் எவ்விதமான மறுப்பும் இன்றி தொடர்ந்தன. அவன் நினைத்திருந்தால் ஒரு இருபதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேந்திரன் தர்சித் ராகுல்

விட்டெறிந்து மூட்டை தூக்கும் கங்காணிகளைக் கொண்டு அவற்றை தூக்கியிருக்கலாம் ஆனால் அப்படி செய்ய மாட்டான் அவன்..... அதுதான் அவன்........ பதினான்கு வருடங்களுக்கு முன்பு வரை....... அவன் தந்தை தாய் யாரென்று தெரியாதவன்.

1987 களில் தென் இலங்கையில் போராட்டங்கள் முளைத்த போது அந்த கிளர்ச்சிக்காரர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்து வந்தான் சாமி. அப்போது சாமி ஒரு கடை நிலை சிப்பந்தி. அவனுக்கு மார்க்ஸ் , பாட்டாளி வர்க்கம் , வலதுசாரி , இடதுசாரி இதை பற்றியெல்லாம் எதுவும் தெரியாது.

ஏதோ அதிகார வெறி கொண்டவர்களும் காக்கி உடுத்திய களவாணிகளும் ஓர் பெயர் தெரியாத சாமானியர்களால் நடு நெற்றியில் சுடப்பட்டு சாகடிக்கப்படுவதை அவன் விரும்பினான். தான் செய்ய விரும்பும் ஒன்று தன்னால் செய்ய முடியாத நிலையில் தன்னை விட சிறப்பாக அதை இன்னும் ஒருவன் செய்யும் போது அவனின் மீது அல்லது அந்த குழுவின் பால் ஒரு ஈர்ப்பு உண்டாகுவது சாதாரணம்.... அப்படி தான் சாமிக்கும் உண்டாகியது அந்த ஈர்ப்பு.

கொஞ்ச நாட்களுக்குள் அவர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடும் இடங்களில் எல்லாம் இவனையும் காணக்கூடியதாக இருந்தது. அவனை இத்தகைய கூட்டங்களில் கொண்டு வந்ததில் முக்கியமான ஒருவன்தான் சோமதாச எனும் பிக்கு.

சாமியை சிங்கள மொழியில் "சகோதரயா" (தோழர்) என்று அழைக்கும் அந்த சோமதாச பிக்கு அடிக்கடி சாமியை பார்த்து இப்படி சொல்வது உண்டு.

"சாமி சஹோதரயா ஓயாலாகே கட்டியத் அப்பித் எக்க எக்கத்து வெண்ண ஓனே.......மொனவாத தன்னவாத ஏக்கய் ஓயாலாகே இந்தியானு கட்டிய தியுனு வெண்ண தியன ஹொந்தம விதிய"

(தோழர் சாமி உங்களின் மக்களும் எங்களோடு ஒன்றிணைய வேண்டும்.... ஏனென்றால் உம்மை போன்ற இந்திய கூட்டம் செழிப்பாக வாழவும் முன்னேறவும் அதுதான் சிறந்த வழி)

ஆனால் அது நடக்கவில்லை, இரண்டே வருடங்களுள் எல்லா கிளர்ச்சிகளும் அரசால் அடக்கப்பட்டது. கிளர்ச்சிக் காரர்கள் ஒன்றன் பின் ஒன்றாய் தங்களை தமது குழுவில் இருந்து நீக்கிக்கொண்டார்கள்..... சிலர் ஊரை விட்டே ஓடிப் போனார்கள்.......சிலர் அங்கிருந்தோரோடு புதிய உறவை அமைத்து ஒதுங்கிக் கொண்டார்கள்.

அப்படித்தான் அந்த கிளர்ச்சிக்காரப் பெண்களுள் ஒருத்தியான பிரேமாவதி எனும் பெண்ணை சாமி மணந்து கொண்டான். சோமதாச பிக்குவோ அதே பகுதியில் இருந்த அவனது விகாரையில் எதுவும் செய்யாத அப்பாவியாட்டம் ஒரு மூலையில் சென்று உபதேசம் கொடுக்க தொடங்கி விட்டான்.

சாமிக்கும் பிரேமாவதிக்கும் இரண்டே வருடங்களில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அது கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து கட்டிளம் பருவம் கடக்கும் வேளையில் தான் அந்த சம்பவம் நிகழ்ந்தது. அது ஒரு பிரித் ஓதும் சடங்கு வைபவம். பிக்குமார்கள் எல்லோரும் வரிசையாக அமர்ந்து இருக்கிறார்கள். பிரேமாவதியின் அண்ணன்மார் தங்கை மார் உட்பட எல்லோரும் அங்கே வந்து இருந்தார்கள். அப்போதுதான் அந்த எதிர்ப்பாரா நிகழ்வு ....... எதிர்ப்பாரா வண்ணம் நிகழ்ந்தது. தன்னை அறியாது ஓடி வந்துக் கொண்டிருந்த பதினான்கு வயது சிறுவன். மன்னிக்கவும்..... எறும்பை கூட கொல்லாத உத்தமர்கள் மொழியில் அந்த கருப்பன் , கள்ளதோணி, இந்தியாக்காரன் மொத்தத்தில் அந்தத் தோட்டக்காட்டுச் சிறுவன் வந்து மோதியதில் அங்கு அமர்ந்திருந்த பிக்கு ஒருவர் கவிழ்ந்து போனார். விடயம் எண்ணவென்றால் அந்த சிறுவன் கலப்பில் பிறந்தவன் இது அந்த குறிப்பிட்ட பிக்குவுக்கும் தெரியும்.

"தோ பௌத்தயெக்த பங்......... தொபினம் கள்ளத் தோணியெக் வென்ன ஓனே.......அன்டன் சிந்துவே கிவ்வா வாகே முன்கெ அப்பலா தெங் முதலாளிலா வேலா நே இந்தியன் காரயோ டிக்க முதலாளிலா வெலா ..... சின்ஹலயோ டிக பல்லோ வெலா....மருய் நே......."

(நீயெல்லாம் ஒரு பௌத்தனா....... நீ கள்ளதோணியாகத் தான் இருக்க வேண்டும்....அன்டன் தனது பாடலில் கூறியதை போல இவர்களின் தந்தைமார்கள் எல்லோரும் முதலாளிகள் ஆகி விட்டார்கள்.... இனி இந்தியாக்காரன் எல்லோரும் முதலாளிகள் சிங்களவர்கள் எல்லோரும் நாய்கள் ஆகி விட்டார்கள்...... நன்றாக உள்ளது அல்லவா....)

அங்கிருந்த பிக்குகளுள் ஒருவன் கொஞ்ச நேரத்திற்குள் தாண்டவமாடியிருந்தான். அவன் வேறு யாருமல்ல கொஞ்ச தசாப்தங்களுக்கு முன்னர் வரை சாமியை "சகோதரயா" (தோழர்) என்று அழைத்து வந்த அதே சோமதாச பிக்குதான். சாமிக்கு கொஞ்ச நேரம் வரை நடந்தது எதுவும் புரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேந்திரன் தர்சித் ராகுல்

அவனது கண்களின் ஓரங்களில் இருந்து கண்ணீர் வழியத் தொடங்கியிருந்தது. அவனது பதினான்கு வயது மகனின் கண்களில் இருந்து வழியும் அதே வகைக் கண்ணீர். கூடி யிருந்த எல்லோரும் …….. அவனது மனைவி உட்பட அவனது மகனையும் அவனையுமே பார்த்து முறைத்துக் கொண்டிருந்தார்கள். சாமி மொத்தமாக உடைந்து போயிருந்தான். சொந்தம் ஒரு வானவில் ஆயினும் அது என்றுமே தற்காலிக இன்பம் அது எவ்வகைச் சொந்தமே ஆனாலும் கூட என்பதை அந்த நொடியில் அவன் உணர்ந்து கொண்டான். இது நடந்து இரண்டே வாரங்களுக்குள் அவன் தனது மளிகைக் கடையை விற்று விட்டான்.

"இதப்பாரு நான் செய்றது சரியா பெலயான்னுலாம் எனக்கு தெரியாது……..நான் ஒனக்கு அப்பனா இருந்தா தானே இவனுங்க ஒன்ன இளக்காரமா பாப்பா னுங்க……இன்னைல இருந்து ஒனக்கு அப்பனேயில்ல……. தாய்தகப்பன் இல்லாத புள்ளைய……. எனைய அனாதைன்னு சொன்னாய்ன்க……கள்ளத்தோனினும்தான்……..ஒன்ன அனாதைன்னு எவனும் சொல்ல முடியாது ஒனக்குன்னு ஒன்னோட அம்மா இருக்கா…………..ஒனக்கு அப்பனா நான் இல்ல அதுனால இனிமே நீ கள்ளத்தோனியுமில்ல….."

சாமி சொல்லச் சொல்ல எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டான் சாமிப்பிள்ளை. இப்போது சாமி கிளம்பத் தயாராகினான்.

"தொப்பி கொஹேத யன்னே பல்லோ………கியலா பலயன்….. தொப்பி கொட்டி வெண்ண யனவத தன்னே நேநே……."

(நீ எங்கு செல்கிறாய் நாயே……. ஏதாயிருந்தாலும் சொல்லி விட்டு போ நீ புலிகள் இயக்கத்தில் இணையப்போகிறாயோ என்னவோ யாருக்கு தெரியும்)
பிரேமாவதி கடும் ஆத்திரத்தோடு கேட்டாள்.

"தோ வாகே வேசி பல்லோத் எக இந்தலா எக்கேனேக்ட கொட்டியேக் வெண்ண பே வேசி….."

(உன்னைப் போன்ற வேசி நாயோடு இருந்து விட்டு ஒருவனால் புலியாக ஆக முடியாது என்பதை தெரிந்து கொள் வேசி)

சாமி அவளை விட்டு நகர்ந்து விட்டான் முற்றாக……. முழுமையாக……..சரி தவறு எதுவும் அவனுக்கு தெரிய வில்லை. தோளில் தட்டி ஆறுதல் சொல்ல தாயோ …….. அதட்டி ஆலோசனை சொல்ல தந்தையோ அவனுக்கு எப்போதும் இருந்ததில்லை.

நீண்ட நாட்களுக்கு பிறகு தொலைபேசி வசதிகள் சாதா ரணமாகிய பின்னர் தான் அப்பனும் மகனும் பேசத் தொடங்கினார்கள். அப்படிதான் இன்று சாமியின் மகன் காலையிலேயே அழைப்பை மேற்கொண்டிருந்தான்.

"அப்பா….."

"ம்ம்….. சொல்லுடா ….."

"ஏன்பா…. அப்படி சொல்ராய்ங்க….. கள்ளத்தோணின்னு…"

"ஒன்னப் பார்த்தா …… யாரு சொன்னா …….."

"என்ன பாத்து இல்லப்பா…….. சின்னவனப் பாத்து….."

"ஓ…. அவனையும் அப்டி கூப்புட ஆரம்பிச்சுட்டாய்ன் களா…… சரி விடு எப்டியிருந்தாலும் அவனும் இதை யெல்லாம் கேட்டுத்தானே ஆகணும்…."

"எது ….. கேட்டு ஆகணுமா …… என் மவன காது பட கள்ளத்தோணின்னு சொல்ராய்ங்க அவன கீழ போட்டு தள்ளிட்டு எலார செத்துட்டான்னு சொல்லி சிரிக்குராய்ங்க அந்த "சீ"னா நாய்ங்க நான் பேசாம இருக்கணும்னு சொல்றீங்களாப்பா………"

"உன் மகன் கிட்ட சொல்லு அவன் அப்பனும் கள்ளத் தோணிதான்னு அப்பன் மட்டும் இல்ல அவன் தாத்தனும் கள்ளத்தோணின்னு சொல்லு ………. அப்பனுக்கு சாரி அனுப்புன காமினிய விட எல்லாளன் பெரிய வீரன்னு சொல்லு…… கள்ளத்தோணிக்கும் கப்பலுக்கும் பெரிய வித்தியாசம் இல்லன்னு சொல்லு……இருநூறோ ரெண்டா யிரமோ எல்லா பயலும் வெளியில இருந்து வந்தவைங்க தான்னு சொல்லு……..முக்கியமா இதையெல்லாம் தமிழ்ல சொல்லு….. அப்புடியே கீழ விழுந்த என் எல்லாள சாமிய தூக்கி தோளுல போட்டுக்க அவுங்க தாத்தன் வந்துக்குட்டே இருக்கேன்னு சொல்லு"

சாமியின் மகன் கண்ணீர் மல்க கேட்டுக் கொண்டிருந்தான். சாமி ஹட்டன் நோக்கி செல்லும் பேருந்துக்காய் காத்துக் கொண்டிருந்தான் தன் பேரனுக்காய் கைகளில் வாங்கி வைத்திருக்கும் விளையாட்டுத் தோணியோடு……….



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கால சூட்சுமம்

அலெக்ஸ்பரந்தாமன்.

"காலம் தனக்கொரு கடுமையான நியாயத்தீர்ப்பை வழங்குமென்று இந்திரா தன் கனவிலும்கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டாள். அவளுக்குள் குடிகொண்டிருந்த அனைத்து ஆங்கார உணர்வுகளும் இப்போது செயலிழந்து போயிருந்தன. காற்றுக் குறைந்த பலூன்போலக் கிடந்தது படுக்கையில் அவளது உடல்.

"மச்சாள்... சாப்பாடு கொண்டு வரட்டே...?" மெதுவாகத் திரும்பிப் பார்த்த இந்திரா, சரி... எனத் தலையசைத்தாள்.

இந்திராவின் தம்பி பரமனின் மனைவி ஒருசிறு தட்டில் இடியப்பங்களுக்குள் சொதிவிட்டுபிசைந்து குழைத்துவிட்டு, அவளருகில் வந்து, அவளை மெதுவாகத் தூக்கி இருத்தியபின், இடியப்பத்தை சிறிதுசிறிதாக அவளுக்கு ஊட்டிக்கொண்டிருந்தாள்.

இப்படித்தான் வாழவேண்டுமென்று சிலர் வழிவகுத்து வாழ்வதுபோல, இந்திராவும் தனக்கென்றொரு வழியை அமைத்து வாழ முற்பட்டாள். இளம் வயதிலிருந்தே அவளுள் தாய் தந்தைவழி மரபுரிமைப் பழக்கங்கள் ஊறிக் கிடந்தன. எதுவும் எனக்குத்தான்... எல்லாமும் எனக்குத் தான்... நான்தான் தந்தை தாய்வழி முதுசங்களை அனுபவிக்கப் பிறந்தவள்... என்ற குறுகிய எண்ணப்பாடுகளால், பெற்றோர், சகோதரனுடன் தினசரி வாய்த்தர்க்கங்களுடன் அவமானங்களையும் உருவாக்கிக் கொண்டிருந்தாள்.

திருமணவயதில் மாப்பிளை வீட்டார் கேட்ட நகைகளைவிட, அது வேண்டும்... இது வேண்டும்... இன்ன வடிவத்தில சங்கிலி செய்து தரவேண்டும்... என அடம்பிடித்து, அழுது அடங்கியபோது, அவளது தாய்தந்தையருக்கு மட்டுமல்ல, அவளோடு கூடப்பிறந்த சகோதரனுக்கும் அவள்மீது வெறுப்பு ஏற்பட்டு விட்டது.

திருமணம் முடித்துக் கணவனோடு அயலூருக்குச் சென்றபின்பு, ஆறுவருடங்கள் கழிந்த நிலையில், கணவனை விபத்தொன்றில் பலிகொடுத்துவிட்டு, கணவனின் உறவினர்களோடு தர்க்கப்பட்டுக்கொண்டு, பிறந்தகத்துக்கே வந்து விட்டாள்.

இந்திரா வாழ்ந்த வீட்டில் பரமனும் அவனது பெற்றோருமே இருந்தார்கள். திருமணம் முடித்துப் போனவள், வாழாவெட்டியாக வந்து நிற்கிறாளே... என்ற பரிதாப உணர்வோடு பெற்றோர் அவளை ஏற்றுக்கொண்டபோதிலும், தம்பி பரமனுக்கு மட்டும் அவளது மீள்வருகை உவப்பானதாக இருக்கவில்லை.

ஒருதடவை அக்காவுக்கும் தம்பிக்கும் ஏற்பட்ட ஒரு சிறு பிரச்சினையொன்றில், தாய் தன் மகளுக்காகப் பரிந்துபேசியது பரமனுக்குப் பிடிக்கவில்லை. எரிச்சல் உணர்வோடு, உடனே அந்த இடத்தைவிட்டு எழுந்துபோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலெக்ஸ்பரந்தாமன்.

விட்டான்.

பொழுது அந்திக்குள் புகுந்து கொண்டிருந்தது. பரமன் இன்னமும் வீடு திரும்பவில்லை. ஊரின் எல்லையருகே அமைந்திருந்த ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தின் முகப்ப ருகில் குந்தியிருந்தவனுக்கு, வீட்டிற்கு வந்திருக்கும் தன் சகோதரி பற்றிய நினைவாகவே இருந்தது.

பெற்றோரின் வெளியுலகம் தெரியாத பிள்ளை வளர்ப்போடு, வீட்டைச்சுற்றி நான்குபக்கமும் கிடுகு வேலி யினால் அடைக்கப்பட்டு அதனுள் வாழ்ந்ததில், சமூகப் பண்புகள், பொதுஇடத்திற்குரிய மரியாதைகள், நாகரிகமான பேச்சுகள்... எதுவும் அவளிடத்தில் இருக்கவில்லை.

தாய்தந்தையே அவளுக்கு உலகமாகவும் வாழ்க்கை யாகவும் மாறிப்போயின. தந்தையிடமிருந்து ஊறிநிற்கும் பணத்திமிரும் தாயிடமிருந்து வந்த சாதித்தடிப்பும் ஒருங்கே சேர்ந்திருந்தன அவளிடத்தில்.

பரமன் அவளுடைய எண்ணங்களுக்கு எதிர்மாறான போக்குடையவன். ஒரு குறிப்பிட்ட வயதுவரைக்கும் பெற்றோரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வளர்ந்தவன். அந்தப் பதின்மவயது வந்ததும், அவனது பார்வை வெளி யுலகத்தைநோக்கி விரியத் தொடங்கியது. பலவித குணவி யல்புகள் கொண்ட மனிதர்களிடமிருந்து நன்மையும் தீமையுமான அனுபவங்களை அவன் பெற்றான். அந்த அனுபவங்கள்... அவன் தேட முனையும் புது உலகத்திற்கு வழிகாட்டிகளாக அமைந்தன. தாய் தந்தை வழிவந்த சாதி, பணத்திமிரிலிருந்து பெற்றுக்கொள்ளும் கசப்பான அனுப வங்கள்... மனிதமற்ற செயல்களிலிருந்து விடுதலையளிக்கத் தொடங்கின. தாய் தந்தை வழியினரால் ஒதுக்கப்பட்ட, சாதி பணத்தினால் ஓரங்கட்டப்பட்டு நின்ற அடிமட்ட மனிதர்களின் வாழ்வோடும், அவர்களது சுகதுக்கங்களிலும் பங்குபற்றினான்.

ஒருதடவை சீவல்காரச்சின்னத்தம்பி தனது தொழில் முடித்து வீடு திரும்புகையில், அவரது மிதிவண்டியின் பின்புறத்தில் அமர்ந்திருந்து வந்ததை யாரோ கண்டு விட் டார்கள். அதைப் பலதும் பத்துமாக அவனது பெற்றோரிடம் 'போட்டு கொடுத்து' விட்டார்கள். இன்னொரு தடவை சலூன்காரச் சண்முகத்தின் இளைய மகனின் திருமண வீட்டில் நான்காம் சடங்கின்போது, நண்பர்களுடன் சென்று உணவருந்தி மகிழ்ச்சியுடன் கொண்டாடிவிட்டு, வீடு திரும்பியபோது... வீட்டில் ஒரு பூகம்பமே வெடித்து ஓய்ந்தது. அதிலும், அவனது அக்கா இந்திரா தனது வாயிலிருந்து கொட்டிய வார்த்தைகள்...

"எளிய தூமை, துரும்புகளிட்டைபோய் இப்படி நக்கிப்போட்டு வந்து நிற்கிறியே... எங்கட இனம் சனம் அறிஞ்சால், எவ்வளவு சீத்துவக்கேடு தெரியுமே...? இல்லை உனக்குத்தான் ஆராவது பொம்புளை குடுப்பினமே...?" கடுப்பேறிக் கொண்டது பரமனுக்கு.

"எடியேய்... என்ர வாழ்க்கையைக் குறிச்சு நீயொண் டும் அக்கறைப்படத் தேவையில்லை. கலியாணம் கட்டிக்கொண்டு போனனி, போன இடத்தில புருசனைத் தின்னக்குடுத்துப்போட்டு, அவன்ர ஆக்களோடை சேர்ந்து வாழத்தெரியாமல், இஞ்சை ஓடிவந்தவள்தான் நீ. பேசாமல் வாயைப் பொத்திக்கொண்டு இரு..."

"மெய்யாவோ..." எனக்கூறியபடி... தன் இருக் கையை விட்டெழுந்து பரமனுக்குக்கிட்ட வந்தாள் இந்திரா. பரமன் அவளை முறைத்துப் பார்த்தான். நிலைமை விபரீதமாவதை உணர்ந்த பெற்றோர் இருவரையும் தனித் தனியே பிரித்து... அவரவர் அறைக்குள் தள்ளிவிட்டனர்.

பரமனுக்கு அவளைக் குறித்துச் சிந்திக்கையில், சினக்கத் தொடங்கியது மனசு. வாழ்விழந்து வந்து, பெற்றோ ரின் தயவில் இருக்கின்ற நிலையிலும், பரம்பரையாய் ஊறி வரும் அந்தத் 'தடிப்புக்குணம்' அவளிடத்தில் விரவிக் கிடப்பதை நினைத்து, அவன் கவலைப்பட்டான். குமர்ப் பிள்ளை என்று அவளை வீட்டுக்குள் பொத்திப் பொத்தி வளர்த்த தனது பெற்றோர்மீது எழுந்தது அவனுக்கு அருவருப்பு. தனக்கொரு வாழ்க்கை அமைந்து, குடும்பமாக வாழும் காலம் அக்காளுக்கும் தனக்கும் அக்காலம் பொருந் திப் போகுமா? என்பது குறித்தும் அவன் சிந்திக்கத் தொடங் கினான்.

வாழ்வின் சூட்சுமம் விசித்திரமானது. அதன் போக்கு எவருக்கும் தெரியாததொன்று. சூட்சுமமும் அதன் போக்கும் எளிதில் புரிந்து விடுமாகில், காலத்தின் நியாயத் தீர்ப்புக்கு புவியில் கனதியில்லாமல் போய்விடும். சூட்சுமம் தன்னைப் புரிந்த ஒருசிலரை ஒருமுகப் பார்வையோடு பயணிக்க வைக்கிறது. வேறுசிலரை கரடுமுரடான பாதைகளூடாக வழிநடத்துவதன் மூலம் தவறை உணரவும், உணர்த்தவும் செய்கிறது. அப்படியொரு பயணமூடாகத்தான், தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலெக்ஸ்பரந்தாமன்.

செல்லப்போகிறேன் என்பதை இந்திரா அறிந்து கொள்ளவுமில்லை. பரமனும் அதைப் புரிந்து கொள்ளவுமில்லை.

பரமனின் சிந்தனைப்போக்கும் வாழ்க்கை முறையும் பெற்றோருக்கும் சகோதரிக்கும் எதிர்மறையாகவே இருந்தது. அவன் தனக்குப் பிடித்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். பெற்றோருக்குப் பெரும் அதிர்ச்சி. அவனுக்குரிய வீட்டின் கதவுகள் மூடப்பட்டு விட்டன.

"அந்தக் கேடுகெட்டவனை இஞ்சை வீட்டிலை அண்டினால், நானும் என்ர பிள்ளையும் கிணத்துக்கை விழுந்துதான் சாவம். சொல்லிப்போட்டன்..." இந்திரா ஆணித்தரமாகச் சொல்லிக் கொண்டாள்.

பெற்றோர் திகைத்துப் போய்விட்டனர். அவள் தங்களைவிடப் பிடிவாதக்காரி. செய்தாலும் செய்துபோடுவாள். அப்படி ஏதாவது நடந்து விட்டால், தங்களின் இறுதிக்கால நிலை...? பெற்றோரும் நாளடைவில் எல்லா மனக்கொதிப்புகளையும் தம்முள் அமுக்கி வைத்துக் கொண்டு, மெல்ல அடங்கிப் போனார்கள்.

பரமன், தான் விரும்பித் திருமணம் முடித்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தான். அது ஒரு கடற்கரைக் கிராமம். அவனுக்கு நீச்சல் ஒரு கைவந்தகலை என்பதால், தனது மாமன் மைத்துனர்களோடு கடற்தொழிலுக்குப் போய்வரத் தொடங்கினான். இதனால், அவனது குடும்ப பொருளாதாரநிலை மெல்ல செழிப்புறத் தொடங்கியது.

இந்நிலையில்தான், வலிகாமத்தில் இடப்பெயர்வு அவலம் ஏற்படத் தொடங்கியது. பரமனும் தன் மனைவியின் உறவுகளோடு, வன்னிப் பெருநிலப்பரப்புக்கு வந்து சேர்ந்தான். அந்த மண்ணிலும் அவலம் தொடர்ந்தது. இறுதியில் எல்லாவற்றையும் இழந்தவர்களாக, மக்களோடு மக்களாக.. இராணுவத்திடம் சரணடைந்தார்கள். பின்பு வவுனியா - செட்டிகுளம் முகாமில் தங்க வைக்கப்பட்டார்கள்.

ஒருநாள் இடைத்தங்கல் முகாமருகே ஓடும் கிளை ஆறு ஒன்றில், தனது மனைவி, பிள்ளைகளுடன் குளித்து விட்டுத் திரும்பிவரும்போது... எதிரே இந்திரா வருவதைக் கண்டு அதிர்ச்சியடைந்தான் பரமன்.

'இவள் எப்படி இஞ்சை...?' இந்திராவும் பரமனை இனங்கண்டு கொண்டு, காணாததுபோல் அவனைக்கடந்து ஆற்றை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள்.

இரண்டு நாள்களுக்குப் பின்பு - வெயில் தணிந்து விட்டிருந்த ஒரு மாலை நேரம்... பரமனது இருப்பிடத்தை விசாரித்தபடி, இந்திரா அவனிருப்பிடம் வந்து சேர்ந்தாள். பரமன் எதுவும் கூறவில்லை. பேசாமல் நின்றான்.

நீண்டநாள்களுக்குப் பிறகு... தம்பியைக் கண்டதும், தன்மனதினுள் குமைந்து, குமுறிக் கொண்டிருந்த அத்தனை கனதிகளையும் அழுதழுது இறக்கிக் கொண்டிருந்தாள் இந்திரா.

பரமன் பெற்றோரை விட்டுப் பிரிந்தபின்பு, ஊரிலும் அவனது குடும்பத்திற்குள்ளும் எவ்வளவோ சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. இந்திராவின் மகன் வளர்ந்து ஆளாகியதும், அவன் இயக்கத்துக்குப் போய் மரணித்ததும், அந்த அதிர்ச்சியில் தாயும் தந்தையும் குறுகியகால இடைவெளியில், ஒருவர்பின் ஒருவராக இறந்து போனதும், இந்திரா தனித்து விடப்பட்ட நிலையில் பெற்றோரின் சொத்துக்களைச் சொந்தங்கள் அபகரிக்க நினைப்பதையும் அவள் அழுதழுது சொன்னபோது... பரமனும் அழுது கொண்டிருந்தான் தன்மனதுக்குள்.

மூன்றுவருட இடைத்தங்கல் முகாம் வாழ்க்கையை முடித்துக்கொண்டு, அவர்கள் ஒரு குடும்பமாக தமது பெற்றோர்களின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். இந்திராவோடு பரமனும் குடும்பமாக வந்ததைக் கண்டதும், அவர்களது தாய் தந்தைவழி உறவினர்கள் 'அருக்களிப்புடன்' அவர்களை விட்டு மெல்ல விலகிக் கொண்டார்கள். அவர்கள் விலகியதும், பரமனின் மனைவிவழி உறவினர்கள் அங்கு வரத்தொடங்கினார்கள்.

மகனின் இழப்பு... நீண்டகால தனிமை வாழ்வு... இடப்பெயர்வு... எல்லாமுமாக இந்திராவைக் கடுமையாகப் பாதித்து விட்டிருந்தது. அவள் இப்போது நோயாளியாகிப் போனாள். முதுமை அவள் உடலை ஆக்கிரமித்திருந்தது. இளவயதில் உடம்பை முறுக்கேற்றி வைத்திருந்த இரத்தமும் இறுமாப்பும் வற்றி விட்டன. படுக்கையில் இருந்த அவளை பரமனின் மனைவியே எதுவித 'அருவருப்புகளுமற்று' இந்திராவைக் கழுவித் துடைத்துப் பராமரித்துக் கொண்டிருந்தாள்.

மீன்தின்னி... கரையாடிச்சி... கரையாம்பெட்டை.... என்று இந்திரா யாரை எவளைக் காறித்துப்பி, தூற்றிச் சபித்தாளோ, அவளே தனக்குப் பணிவிடை செய்ய வைத்த காலத்தின் சூட்சுமத்தை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை இறுதிவரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூசணம் தம்பிலுவில் ஜெகா




இலக்கியா தரம் பத்தில் படிக்கும்போதே பத்திரிகைகளில் வெளிவரும் சிறுகதைகளை விரும்பி வாசிப்பாள். அப்பயிற்சியின் காரணமாக பாடசாலையிலிருந்து வெளி வரும் 'முத்தாரம்' சஞ்சிகைக்கு 'அன்னை' எனும் தலைப்பில் தன் முதலாவது சிறு கதையை எழுதினாள். அவள் எதிர் பார்த்ததைவிட அக்கதைக்கு பெரும் வரவேற்புக் கிடைத்தது. ஆசிரியர்களும் அவளைப் பாராட்டினார்கள்.

தனது ஓய்வு நேரங்களை பெரும்பாலும் நூலகத்திலேயே கழிக்கின்ற இலக்கியா சிறு கதைகள் வாசிப்பதில் அதிக ஆர்வம் காட்டினாள். பாட நூலிலுள்ள சிறுகதைகளை விரும்பி மீண்டும் மீண்டும் வாசிப்பாள். தனக்குப் பிடித்த எழுத்தாளரான வ.அ.இராசரெத்தினத்தின் 'தோணி' எனும் சிறுகதை அவளுக்கு மனப் பாடமாகி விட்டது. இவ்வாறு வாசிப்பதில் ஆர்வமுள்ள இலக்கியா அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டிகளுக்கும் சிறுகதை எழுதினாள்.

இவ்வாறு இலக்கியத்திலும் கற்றலிலும் ஈடுபாடுள்ள இலக்கியா கலைப்பிரிவில் தேர்வு பெற்று பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானாள். அங்கு தமிழ்மொழியை சிறப்புப்பாடமாகக் கற்றாள். சிறு கதைகளை திறனாய்வு செய்யும் திறனையும் வளர்த்துக் கொண்டாள். பல்கலைக் கழக கல்வி முடிந்தபின்பு தான் தமிழ்ப்பாட ஆசிரியராக வரவேண்டுமென கற்பனை செய்தாள். ஆனால், அவளுக்குக் கிடைத்த வேலையோ பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி.

இலக்கியாவின் கணவனும் அதே பிரதேச செய லகத்தில் அதே பதவியில் கடமையாற்றி வந்தான். அவன் சனி, ஞாயிறு தினங்களில் தனக்கு ஓய்வு கிடைக்கும் வேளையில் சினிமாப் படம் பார்ப்பான். படம்பார்ப்ப தென்றால் அவனுக்கு மிகப்பிரியம்.

ஆனால், இலக்கியாவோ ஓய்வுநேரங்களில் சிறு கதை எழுதுவாள். கணவனுக்கு இது பிடிப்பதில்லை. "கதையும் கத்தரிக்காயும் விட்டுப்போட்டு வேலை யைப்பாரு" என அடிக்கடி கூறுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூசணம் தம்பிலுவில் ஜெகா

சிலசமயங்களில் அவன் சொன்ன ஒருசில வேலை களை தவறிப்போய் செய்ய மறந்து விட்டால் "ஓ.... கதை எழுத மறக்காது. நான் சொன்னவேலை மறந்து போச்சோ" என கிண்டலாகவும் குத்துப்பாடாகவும் கதைப்பான்.

தன்கணவன்இவ்வாறு பேசுவது அவளது கற்பனைப் பாத்தியில் முளைகொள்ளும் கதைக்கரு எனும் விதைக்கு சுடுநீர் ஊற்றுவது போல் இருக்கும். என்ன செய்வது பெண்ணாய் பிறந்துவிட்டோமே என்று பேசாமல் இருப் பாள்.

அவ்வருட மகளிர் தினத்துக்காக சஞ்சிகையில் சிறுகதைப்போட்டி ஒன்று வெளியானது. அப்போட்டிக்கு சிறுகதைஎழுத ஆயத்தமாகி சிலவரிகளை எழுதிக் கொண்டி ருந்தாள்.

அப்போது வேலை முடிந்து வந்த அவளின் கணவன் இலக்கியாவின் அருகில் சென்று "என்னேரம் பார்த்தாலும் எழுத்துத்தான்" என்று சத்தமிட்டான். கதைக்குக்கதை கதைத்தால் பிரச்சினைவரும் என எண்ணி இவ்வளவு நாளும் தன்வாயை மூடிக்கொண்டிருந்த இலக்கியா அன்று வாயைத் திறந்து "நீங்களும் மணித்தியாலக் கணக்கில் படம் பார்க்கிறியள்தானே நான் ஏதாவது கதைக் கிறேனா. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் விருப்பம் இருக்கும்தானே" என நிதானமாகக்கூறினாள்.

'இஞ்சபாரு இன்னமும் வீடு கூட்டல்ல. வாய்க்கு வாய் கதைக்க பழகிவிட்டாய். எனக்கூறிக்கொண்டு அவள் கதை எழுதிக்கொண்டிருந்த காகிதத்தை கசக்கி எறிந்தான். மலரத்துடித்த மொட்டொன்று கசக்கி வீசப்பட்டது போல அக்காகிதம் ஒரு மூலையில் போய் விழுந்தது.

02

மனதில் பொங்கிவந்த கோபத்தீயை அணைத்துக் கொண்டு வாசலில் இருந்த பூக்கன்றுகளுக்கு நீரூற்றினாள். அப்போது ஒரு தென்னம்வண்டு பூச்சட்டிக்குள் வந்து வீழ்ந்தது.

மீண்டும் அவளின் வாய் முணுமுணுத்தது. "மலர்களின் வாசம் இதற்கு எங்கே தெரியப் போகின்றது. வளர்ந்து வரும்தென்னையின்குருத்தை மட்டும்அறுக்கத்தான் இதற்குத் தெரியும்" என எண்ணியவாறு தன் பணியைத் தொடர்ந்தாள்.

அன்று சனிக்கிழமை. இரவில் செய்யவேண்டிய வேலைகள் அனைத்தையும் செய்து முடித்து படுக்கைக்குச் சென்ற இலக்கியாவுக்கு நித்திரை வரவில்லை. கணவனோ குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

இலக்கியா படுக்கையை விட்டெழுந்தாள். சுவரைப் பிடித்துக் கொண்டு மெது மெதுவாக நடந்து குசினிக்குள் வந்தாள். லைட்டைப்போட்டுவிட்டு கதவை சாத்தினாள். இவ்வளவு நாளும் சிறிது சிறிதாக எழுதி றைஸ்குக்கருக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த சிறுகதை எழுதும் கொப் பியை எடுத்தாள்.

குசினிமூலையிலிருந்த திருவிலை குத்தியின்மீது வைத்து கதையை எழுதி முடித்தாள். மறு நாட்காலை எப்படியாவது இதை தபாலில் சேர்க்கவேண்டும் எனும் எண்ணமே அவள் மனதில் குடிகொண்டிருந்தது.

விடிந்ததும் சிறுகதைப்போட்டி விண்ணப்பத்தை தெளிவாகப் பூர்த்தி செய்து அத்துடன் கதையையும் இணைத்து தபாலில் சேர்த்தாள்.

கதையைப் போட்டிக்கு அனுப்பி ஒரு மாதம் ஆகிவிட்டது. ஒரு சனிக்கிழமை அன்று இலக்கியா குசினிக் குள் சமைத்துக்கொண்டிருந்தாள். அப்போது அவளின் கணவன் இலக்கியா என அழைத்துக்கொண்டு குசினிக்குள் வந்தான்.

நெடிய காகித உறை ஒன்றை நீட்டி 'இந்தா உனக்குத்தான் கடிதம் வந்திருக்கு' என நீட்டினான். 'நான் சொதி ஆத்திக்கொண்டிருக்கிறேன். நீங்கள் அந்தக் கடிதத்தை உடைச்சி வாசியுங்கோ' என்றாள்.

கடிதத்தை உடைத்து வாசித்தவன் 'உன்ட கதைக்கு முதலிடம் கிடைச்சிருக்காம். விரைவில் பரிசுப்பணம் அனுப்பிவைக்கப்படுமாம்' என்றான். இதனைக்கேட்ட இலக்கியாவோ மனதுக்குள் மகிழ்ந்தாலும் அவனைத் திரும்பிக் கூட பாராது சொதியை தொடர்ந்து ஆத்திக் கொண்டிருந்தாள். சொதியோ குமிழ் விட்டுக் கொதித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கதை

மு.தயாளன்

# கரும்பலகை

## அத்தியாயம் 13

அன்று பாடசாலைக்கு வந்த கபிலனால் அமைதியாக இருக்க முடியவில்லை. அவன் தான் அமைத்துவந்த நேரசூசியை ஒரு தரம் பார்த்துக் கொண்டான். அதிபர் வருமளவுக்கும் காத்திருந்தான். அப்போது அவனைத் தாண்டிச் சென்ற சந்திரவதனா ரீச்சர் அவனைக் கவனியாதது போல் ஒரு நையாண்டியோடு சென்றாள். கபிலன் அதைப் பொருட்டாக எடுக்கவில்லை. தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.



சிறிது நேரங்கழித்து அதிபர் உள்ளே நுழைந்தார். வரும்போது எல்லோருக்கும் குட் மோர்ணிங் என்று சொல்லிக் கொண்டு வந்தார். அப்படியே ஆசிரியர் தங்கும் அறையை எட்டிப் பார்த்து எதிலோ மும்மரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த கபிலனைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டே அங்கு நின்ற ஒரு ஆசிரியரைப் பார்த்து கபிலன் மாஸ்டரை என் அறைக்கு வரச் சொல்லும் என்று கூறிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்து விட்டார்.

அந்த ஆசிரியை மூலமாக அதிபர் வந்ததை அறிந்து கொண்ட கபிலன் தன்னுடைய பேப்பர் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அதிபரிடம் சென்றான். அதிபரைப் பார்த்து காலை வணக்கம் கூறிவிட்டு அவருக்கு முன்னால் அமர்ந்து அதிபரைப் பார்த்தான்.

“ என்ன கபிலன் காலைமை வெள்ளனவே வந்தமாதிரிக் கிடக்குது. ” என்று அதிபர் கூற “ ஓம் கொஞ்சம் வேலை இருந்தது. அதுதான் வந்தனான். ” என்று கூறிவிட்டு தான் கையில் வைத்திருந்த கடிதத்தை அவரிடம் கொடுத்தான். அதனில் பின்வருமாறு இருந்தது.

அன்புள்ள ஆசிரியர்களுக்கு,

நேற்று மாலை அதிபரோடு நடந்த கூட்டத்தின் பிரகாரம் பின்வரும் வேலைத்திட்டங்களை மாணவர்களின் நன்மை கருதி எடுக்கவுள்ளேன். பாடசாலையின் கல்வி புகட்டலை நவீனப்படுத்த வேண்டிய தேவையின் காரணமாக பின்வரும் ஆலோசனைகளை உங்கள் முன் வைக்கிறேன். உங்களுக்கு இவற்றில் ஏதாவது ஆட்சேபணைகள் இருந்தால் தயவு செய்து வருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.தயாளன்

வெள்ளிக்கிழமை அதிபரோடு நடை பெறும் கூட்டத்தில் அவற்றைத் தெரிவிக்கும்படி பணிவன்புடன் வேண்டுகின்றேன். தற்சமயம் நாம் செய்யவேண்டிய முதற்படியினைக் கூறுகின்றேன்.

பாடங்களின் வகையில் புதியபிரிவுகளை உருவாக்கல். இதன் பிரகாரம் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வணிகக் கல்வி, சமூகக் கல்வி, வரைதற் கல்வி ஆகிய பிரிவுகளை இனங்கண்டுள்ளேன். இவற்றுக்கான பொறுப்பாசிரியர்களாக பின்வருவோரை நியமிக்கலாமென நினைக்கின்றேன்.

கணிதம்- கமலாம்பிகை, விஞ்ஞானம் - வசந்தி

ஆங்கிலம் - பொன்மணி, சமூகக்கல்வி - சுகந்தி,

வணிகம் - சந்திரவதனா, வரைதற்கல்வி - சுசாந்தினி

இவைகள் என்னுடைய ஆலோசனைகளே. உங்கள் பெயர்களைத் தவறாக எழுதியிருந்தால் மன்னிக்கவும். மேலே கூறியபடி உங்கள் அபிப்பிராயங்களை வெள்ளிக் கிழமை அதிபரோடு நடைபெறும் கூட்டத்தில் தெரிவிக்கவும்.

கபிலன்

என்றிருந்தது. அதனைப் படித்த அதிபர் கபிலனை வியப்போடு பார்த்தார். எவ்வளவு அவதானமாக சில விடயங்களை கபிலன் அணுகியுள்ளார் என்று மன மகிழ்வோடு அவனைப் பார்த்தார்.

" எனக்குப் பிடிச்சிருக்குது கபிலன். இதனை பாடசாலையின் கடிதத்தலைப்பில் தட்டச்சுச் செய்து இன்றைக்கே ஆசிரியர்களுக்குக் கொடுப்போம்" என்று கூறி தனது செயலியைக் கூப்பிட்டு கடிதத்தைக் கொடுத்தார். பத்து நிமிடத்தில் எல்லாம் தயாராகிவிட்டது. கடிதமும் ஆசிரியர்களிடம் சேர்ப்பிப்பதற்கான ஒழுங்குகளும் செய்தபின் அதிபரின் அறையைவிட்டு வெளியில் வந்த கபிலன் தான் படிப்பிக்கும் வகுப்பிற்குச் சென்றுவிட்டான்.

கடிதம் பத்துமணியளவில் ஆசிரியர்களுக்கு அவர்கள் படிப்பித்துக் கொண்டிருந்த வகுப்பறைகளிலேயே வைத்துக் கொடுக்கப்பட்டுவிட்டது.

கடிதம் கிடைத்த நேரத்திலிருந்து ஒரே சலசலப்பு. ஆளையாள் சந்திக்கும் ஆசிரியைகள் ரகசியமாக இதுபற்றிக் கதைத்துக் கொண்டனர். கபிலன் குறித்த பெயர்களில் சந்திரவதனாவினதும் அவவின் கூட்டாளிகளான இருவர் பெயரும் இருந்தன.

சந்திரவதனா இடைவேளையில் அவர்களைச் சந்தித்து தனக்கு அந்தப் பதவியில் விருப்பமில்லை என்றும் அவளின் நண்பிகளையும் அப்படிச் செய்யச் சொல்லி வற்புறுத்திவிட்டுச் சென்றாள். எந்தக் காரணம் கொண்டும் கபிலன் அதை நிறைவேற்ற அனுமதிக்கக் கூடாது என்றும் சொல்லி வைத்தாள். அவர்கள் எந்தப் பதிலும் கூறவில்லை.

வசந்திக்கு நல்ல சந்தோசம். கபிலனுக்கு நன்றி சொல்வதற்காக அவனைத் தேடிக் கொண்டு வந்தாள். அவள் வரும்போது அவளை இடைமறித்த சந்திரவதனாவின் நண்பிகள் சுகந்தியும் சுசாந்தினியும் கபிலனின் கடிதத்தைக் காட்டி விளக்கம் கேட்டனர். இவர்களைப்பற்றி நன்கு தெரிந்த வசந்தி கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பதவி உங்களுடைய துறைக்கு நீங்கள்தான் அதிபர் அந்தத்துறையில் படிப்பிக்கும் ஆசிரியைகளை நீங்கள் தான் வழிநடத்த வேண்டும் என்றும் சிலவேளை சம்பள உயர்வும் கிடைக்கலாம் என்றும் கூறியபோது அவர்கள் ஆளைஆள் பார்த்துக் கொண்டனர். அவர்களை அப்படியே விட்டுவிட்டு கபிலனைத் தேடி வந்த வசந்தி கபிலன் பிள்ளைகளோடு கதைத்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து அவ்விடத்திற்குவந்து அவனுக்கு நன்றி கூறினாள். அதற்குள் மணியடிக்க தங்கள் வகுப்பறைகளுக்குச் சென்றுவிட்டார்கள்.

ஆசிரியைகளின் முணுமுணுப்புகளைக் கேட்ட உதவித்தலைமை ஆசிரியை அதிபரின் அறைக்குச் சென்று விடயங்ளைக் கூறினார். இதுபற்றி இன்றே நீங்கள் ஆசிரியைகளோடு கதைப்பதுதான் நல்லது என்று நினைக்கிறேன் என உதவி அதிபர் கூறினார். அதிபர் சிறிது நேரம் யோசித்துவிட்டு " எதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.தயாளன்

கூடச்சுட்ச் செய்வதுதான் நல்லது" என்று கூறிவிட்டு "எதுக்கும் நீர் ஒருக்கால் கபிலனின்ரை வகுப்பிலை நிண்டு கொண்டு கபிலனை ஒருக்கா இஞ்சை அனுப்பி வையுங்கோ என்று அதிபர் கூறினார்.

கபிலன் வந்தபோது அதிபர் அவனுக்கு விடயத்தைப் புரியவைத்து "இன்று மாலையே பிரத்தியேகக் கூட்டமாக வைப்பம்" என்றார். கபிலனுக்கு எதுவும் விளங்கவில்லை. ஏன் இந்த அவசரம் என்றும் அவனுக்குப் புரியவில்லை. அதிபர் கூறியதும் எவ்வித கேள்விகளுமின்றியே தலையாட்டிவிட்டான். ஆனால் ஏதோ நடந்திருக்கிறது என்பதுமட்டும் புரிந்தது.

திரும்பவும் வகுப்புக்குப் போய்விட்டான். சந்திரவதனா ரீச்சரால் ஏதோ பிரச்சினை என்றுமட்டும் புரிந்தது. எதுவும் வரட்டும் சமாளிப்போம் என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தபோது வகுப்பறை வாசலில் வசந்தி வந்து நின்றிருந்தாள்.

கபிலன் வாசலுக்குச் செல்ல, "கபிலன் சுற்று நிருபம் கிடைச்சுதே, அதிபர் இன்றைக்குப் பின்னேரம் அவசரப் பிரத்தியேகக் கூட்டம் என்று போட்டிருக்கிறார்" என்றாள் வசந்தி.

"ஓம் எனக்குத் தெரியும். என்ன பிரச்சினை என்று தெரியுமோ?" என்று கபிலன் கேட்டான்.

"எல்லாம் சந்திரவதனா ரீச்சரின்ரை வேலைதான். அவ ஒரு வைக்கற்பட்டடை நாய். தானும்செய்யமாட்டா செய்யிறவையும் விடமாட்டா. உங்கடை அந்தத் திட்டம் அவவுக்குப் பிடிக்கவில்லையாம். அதை எப்படியும் நடத்த விடமாட்டாவாம். அவவுக்குப் பின்னாலை கொஞ்சம் வாலுகள் இருக்கினம்தானே. அவையையும் கூட்டிக் கொண்டு பிரச்சினை கிளப்பப்போறாவாம். இதைத் தெரிஞ்சு கொண்டு அவ இன்னும் சன்னதம் ஆடுறதுக்குள்ளை வாலை ஒட்ட நறுக்கத்தான் இந்தக் கூட்டம் என்று நினைக்கிறன்." என்று கூறி முடித்தாள்.

பாடசாலையின் கடைசிப்பாடம் முடிந்ததிற்கான மணியடித்தது.

ஆசிரியர்கள் எல்லோரும் தங்களுக்குள் முணு முணுத்தபடி கூட்டத்திற்கு வந்திருந்தனர். சந்திரவதனா தன் கூட்டத்தாருக்குக் கண்ணால் சைகை செய்து தான் கூறியதைச் செய்யுமாறு அறிவுறுத்தல் விடுத்துக் கொண்டிருந்தாள்.

அதிபர் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. அதிபர் தொண்டையைச் செருமிக் கொண்டு ஆரம்பித்தார்.

"உங்கள் எல்லோருக்கும் வணக்கம். திடீரென இக் கூட்டம் வைக்கப்பட்டதையிட்டு மன்னிப்புக் கோரு கிறேன். யாவும் பாடசாலையின் நன்மை கருதியே செய்யப்படுகிறது என்பதை மனதில் கொள்ளும்படி அன்போடு வேண்டிக் கொள்கிறேன். இன்று உங்கள் எல்லோருக்கும் ஒரு சுற்று நிருபம் வந்திருக்கும். அதனை நமது ஆசிரியர் கபிலன் அவர்கள் என்னுடைய சம்மதத்தோடுதான் அனுப்பி வைத்தவர். அவருடைய இந்த அணுகுமுறை எனக்குப் பிடித்துள்ளது. அதனில் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தலைவரை கபிலன் அவர்கள் பெயரிட்டு உள்ளார்.

நீங்கள் நினைக்கலாம் இப்படி ஒரு நடைமுறை எந்தப் பள்ளிக்கூடத்திலும் இல்லை நாம் ஏன் செய்யவேண்டுமென்று. வளர்ச்சி என்பது மிக அவசியம். இது சம்பந்தமாக கல்வித் திணைக்களத்திற்கும் இன்று கடிதம் அனுப்பவுள்ளேன். அவர்கள் சம்மதம் கிடைக்குமென நூறுவீதம் நம்புகிறேன். இவ்விடத்தில் தன் நேரத்தையும் பொருட்படுத்தாது பாடசாலைக்காகச் செலவிட்டமைக்கு நன்றி கூறுகிறேன்.

இந்த ஆலோசனை சம்பந்தமாக உங்கள் அபிப்பிராயங்களைக் கூறலாம். உங்கள் ஆலோசனைக ளும் முக்கியமானவை என்பதை நினைவில் கொள் ளுங்கள்"

என்று கூறிவிட்டு ஆசிரியர்களைப் பார்த்தார் அதிபர்.

(இன்னும் வரும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சி. மௌனகுரு



# மலையகத்தின் அடையாளம்

உண்மையும் நேர்மையும் குழந்தைமனமும் அடிமட்ட மக்கள் நலன் மீது ஆர்வமும் கொண்ட ஒருவரை இழந்தோம். நண்பர் தெளிவத்தை ஜோசப்பை நினைக்கையில் என் மனக் கண் முன் வருவன அவரது வெளிப்படையான பேச்சும் அதனோடு வெளிப்படும் ஒரு குழந்தைச் சிரிப்புமே எனது நீண்டகால நண்பர் அண்மைக்காலம் வரை தொலைபேசியில் தொடர்பு . பின் அதுவும் நின்று விட்டது

முந்தாநாள்தான் அவரின் தொலைபேசி இலக்கத்தை எழுத்தாள நண்பர் சதீஸ் செல்வராஜ் எனக்குத் தந்தார். பெரும் சத்திரசிகிச்சைக்குள்ளாகி ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் அவரை மறு நாள் போன் பண்ணி உரையாடவும் விரைவில் சென்று பார்த்து வரவும் நினைத்திருந்தேன் ஏமாந்து போனேன்! கழிவிரக்கம் எனும் உணர்வை அனுபவிக்கிறேன் நண்பரே செல்லும் இடம் எலாம் மலையகம் மலையகம் என முழங்குவீர்கள்! பேச்சில் எழுத்தில் உரையாடலில் எல்லாம் மலையகம்தான்.

அந்த மக்களோடு வாழ்ந்து அவர்களின் இரத்த ஓட்டத்தை அவர்கள் நாடித் துடிப்பை அவர்கள் விட்ட துயரப் பெருமூச்சினை அனுபவத்தால் அறிந்தீர்கள், அதனையே உங்கள் இலக்கியத்தின் கருப்பொருளாக்கினீர்கள். காலம் சென்ற டானியலிடம் கேட்டார்களாம் .

"உங்கள் கதைகள் நாவல்களில் எல்லாம் யாழ்ப்பாணத்தின் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் பற்றியே பேசுகிறீர்களே". என்று அவர் அதற்கு இரண்டு பதில் தந்தாராம் ,
ஒருபதில்

"அவர்கள் இருக்கிறார்களே! அவர்களின் பிரச்சனைகள் இருக்கிறதே"

இரண்டாவது பதில்

"அது அவர்களின் கதை அல்ல எனது கதை, நான் அனுபவித்தவை" தெளிவத்தையாரும் இவ்வண்ணமே பதில் கூறியதாக அறிந்தேன். ஆம் அவர் தம் வாழ்வனுபவத்தை தன் எழுத்துக்களில் கொணர்ந்தார். அவரது வாழ்வே அவரது இலக்கியம். அவர் பேச்சு -- மூச்சு, நாடி -----நரம்பு எலும்பு---தசை, நிணம் -இரத்தம் எல்லாம் இரண்டறக் கலந்திருந்தது என்ன தெரியுமா?

மலையகம்... மலையகம்..... மலையகம்

அவருடன் உரையாடினால் அவரது தேர்ந்த வாசிப்பும் ஆழ்ந்த வாசிப்பும் புரியும். ஒருமுறை அவர் கனடாவிலிருந்து வரும் மனிதன் மாத இதழ் பத்திரிகையில் என்னைப் பற்றி ஓர் நீண்ட கட்டுரை எழுதியிருந்தார், இத் தகவல்களையெல்லாம் இந்த மனுசன் எங்கிருந்து பெற்றார் என வியந்தேன். எழுதியது மாத்திரமல்ல அக்கட்டுரை வந்த இதழையும் அப்பத்திரிகையின் இன்னும் பல இதழ்களையும் எடுத்துக்கொண்டு மட்டக்களப்பிற்கே வந்து விட்டார் கூட இருந்தவர் உமா வரதாரஜன். எனக்கு அவர் அப்பத்திரிகைகள் தந்த அந்தப் படத்தைப் பத்திரமாக வைத்திருந்தேன் நானும் உமாவும் தெளிவத்தையாரும் அதில் ஆனந்தமாகக் காட்சியளிக்கிறோம். அதனைத் தேடு தேடென்று தேடினேன். நணபர் தெளிவத்தையாரைப் போல அதுவும் துயர் தந்து காணாமல் போய்விட்டது. அவரைக் கடைசியாக மட்டக்களப்பில் நடந்த இலக்கியக் கூட்டமொன்றில் சந்தித்தேன். கூட இர்பானும் முர்சித்தும் இருந்தனர் நான் செய்த அதிஸ்டம் அன்று எனது காண்டவ தகனம் நாடகம் அங்கு மேடை கண்டது. மௌனா எனக் கட்டி அணைத்து கொண்டமை ஞாபகம் வருகிறது. என்னை மௌனா மௌனா என அழைக்கும் அக்குரல் இன்றும் காதில் கேட்கிறது. அக்குரலில் ஒரு ஈர்ப்பு இருக்கும் - ஓர் அண்ணனின் பாசம் இருக்கும். ஓர் நெருங்கிய உறவின் ஓசை இருக்கும். அக்குரல் இப்போதும் கேட்கிறது . அது அவரது திவ்விய உருவை என் முன் கொணர்கிறது . இன்று கொழும்பில் நடந்த ஓர் கருத்தரங்கு சென்றேன் அங்கு ஒரு பெண் நாங்கள் இந்தியவம்சாவழியினர் அல்ல இலங்கையின் மலையகத்தார்.மலைகளில் வாழ்வோர் மலையகத்தார் எனக் கூறி முழங்கினார் . அதுவே எனது அடையாளம் என்றார். எனக்கு தெளிவத்தையின் ஞாபகமே வந்தது. அவள் உருவில் எனக்கு தெளிவத்தை தெரிந்தார் அவர் விதைத்தவை இன்று செடிகளாக வளர்ந்து நிற்கின்றன. அவர் முழு வாழ்வை வாழ்ந்து விட்டே செல்கிறார். அர்த்தபூர்வமானதோர் வாழ்வு. யாருக்கு இது வாய்க்கும்? அவர் வாழ்ந்த வாழ்வை கொண்டாடுவோம்.

நன்றி: முகநூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமல் பரம்

# செல்வம்



“அம்மா நேரமாச்சு. கடை திறக்க முதலே போய் நிக்கவேணும் பிந்திப் போனால் முதலாளி கத்துவாரம்மா” கடைக்குப் போக அவசரப் பட்டேன்.

“சாப்பிட்டிட்டுப் போ. இனி வேலை முடிஞ்சு வந்துதான் சாப்பிடுவாய். இதுக்குத்தானே படிப்பையும் விட்டு உழைக்கிறாய்” கண் கலங்கியபடி சாப்பாட்டைத் தந்தாள் அம்மா.

“உங்கட ஆசைக்கு பவித்ரா படிக்கிறாள்தானேம்மா பிறகேன் கவலைப்படுறீங்கள்”

“உனக்கு ஏ எல் சோதினை முதல்தரம் பிழைச்சுப் போச்சு. அதை இரண்டாம்தரம் எடுத்து பாஸ் பண்ணியிருந்தால் ஏதாவது வேலைக்கு முயற்சி செய்திருக்கலாம். அதை விட்டிட்டு கடைவேலைக்குப் போயிட்டியே நினைக்க மனம் ஆறுதில்லையடா”

அம்மா சொல்லிக் கொண்டிருக்கும்போது அறைக்குள் இருந்து அப்பாவின் இருமல் சத்தம் கேட்டது. அம்மாவை மேற்கொண்டு கதைக்கவேண்டாம் என்று சைகை செய்தேன். நான் படிப்பை விட்டு வேலைக்குப் போவது அவருக்கும் கவலைதான். அதையே நாமும் அடிக்கடி சொல்லும்போது தன் இயலாமையை எண்ணி அதிகம் கவலைப்படுவார்.

எங்களுக்காக இரவு பகல் பாராமல் உழைத்தவர் அந்த விபத்துக்குப் பின் ஓய்ந்து போனார். வயல்வேலை, தோட்ட வேலை, கட்டிடவேலை என்று எந்த வேலை கிடைத்தாலும் போய்விடுவார். குமரபுரத்துக்கு வீட்டுத்திட்டம் வந்தபின் கட்டிடவேலை தொடர்ந்து வந்தது. எந்தவித கவலையுமின்றி நானும் பவித்திராவும் படித்துக் கொண்டிருந்தோம். ஏ. எல் பரீட்சைக்கு மூன்று மாதங்கள்தான் இருந்தது. அன்று வழமைபோல் காலையில் வேலைக்குப் போனவர் வேலை நடந்து கொண்டிருந்த வீட்டின் மேல் பகுதியில் ஏறி நின்று வேலை செய்து கொண்டிருந்தபோது கால் சறுக்கிவிட்டது யாரும் எதிர்பார்க்கவில்லை. பிடிமானம் இல்லாமல் விழுந்ததால் இடுப்பு எழும்பு முறிந்து விட்டது. மாதக் கணக்கில் ஆஸ்பத்திரியில் இருந்தாலும் எழுந்து நடக்க முடியவில்லை. அப்பாவோடு உடனிருந்ததால் என்னாலும் படிக்க முடியவில்லை. படிக்காமலே பரீட்சைக்குப் போனேன் இரண்டு பாடங்கள்தான் பாஸ் பண்ண முடிந்தது. திரும்பவும் படிக்கச் சொல்லி வற்புறுத்தினாலும் என்னால் முடியவில்லை. அப்பாவின் வருமானம் இல்லாமல் கஷ்டமாகயிருந்தது. கட்டிடவேலை செய்ய அம்மா அனுமதிக்கவில்லை. கடைவேலையைத் தேடிக்கொண்டேன்.

சாப்பிட்டு எழுந்தபோது பாடசாலைக்குப் போக ஆயத்தமாகி புத்தகப்பையோடு பவித்ரா வந்தாள். என்னை விட ஐந்து வயது இளையவள்.

“அண்ணா கணக்குக் கொப்பி முடிஞ்சுது. தமிழ் கொப்பியில இரண்டு ஒற்றைதான் இருக்கு. கடையால வரேக்க வாங்கி வாறீங்களா பேனையும் வேணும்” என்றாள். சம்பளக்காசு பதினைந்தாயிரம் வந்ததும் அம்மாவிடம் கொடுத்து விடுவேன். அந்தப் பணத்தை எப்படித்தான் மாதம் முழுவதும் இழுத்து வைத்து சமாளிக்கிறாளோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமல் பரம்

செலவை நினைத்ததும் அம்மாவுக்கு சிறிது கைகொடுக்கும் கோழிகளும் கிணற்றடியிலுள்ள வாழைமரங்களும் சின்ன மரக்கறித் தோட்டமும் நினைவுக்கு வந்தது. பணத்தை வாங்கிக் கொண்டு சைக்கிளில் விரைந்தேன். பரந்தனிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள கிளிநொச்சியில் இருக்கும் தேவன் பலசரக்கு கடையில் ஒரு வருடமாக வேலை செய்கிறேன். கரடிப்போக்குச் சந்தியை நெருங்கும்போது பார்த்தேன் மூன்று நாட்களாய் எரிபொருளுக்காக பெற்றோல் நிலையத்துக்கு முன்னால் நீண்ட வரிசை காத்திருந்தது. முதல் ஆளாய் நின்றிருந்த வரதன் அண்ணை தன் வாகனத்தில் சாய்ந்தபடி பின் வரிசையில் நின்றவர்களோடு கதைத்துக் கொண்டிருந்தார். நேற்று வேலை முடிந்து போகும்போது அவரோடு கதைத்தேன்.

“கொழும்புக்குப் போய் வர வாகனம் கேட்கினம். இருக்கிற டீசல் காணாது. டீசல் வருகுது எண்டு சொல்லுறாங்கள் மூண்டு நாளாய் வீட்டுக்கும் போகாமல் இங்கேயே கிடக்கிறன் எப்ப வருமோ தெரியேல. உழைப்பில்லாமல் கஷ்டமாயிருக்குதடா”

அவருக்கு எப்பிடி ஆறுதல் சொல்வது இவரைப்போல எத்தனை பேர். வரிசையில் வாகனங்களுடன் நிற்பவர்களின் கவலை தோய்ந்த முகங்களைப் பார்க்கும்போது மனம் பிசைகிறது. வரிசையும் இன்று நீண்டிருக்கிறது. இன்றாவது டீசல் வருமா...

அவர்களைக் கடந்து போகும்போது மறுபக்கம் காஸ் சிலிண்டர் கடையின் முன்பும் காலி சிலிண்டர்களோடு ஒரு வரிசை நின்றிருந்தது. இன்று சிலிண்டர்கள் வரும் என்று அறிவித்து இருந்ததால் அந்த சுற்று வட்டாரத்திலுள்ளவர்கள் வந்து வரிசையில் காத்திருந்தார்கள். இன்று வாங்காவிட்டால் அடுத்தமுறை எப்போது வரும் என்று தெரியாது. வரும் சிலிண்டர்களை இன்றே கொடுத்து முடித்து விடுவார்கள். வாங்கும் சிலர் கஷ்டத்தினாலோ அல்லது லாபம் கருதியோ அதை மூன்று மடங்கு விலைக்கு விற்றும் விடுவார்கள். வாங்க முடியாதவர்கள் பழையபடி விறகு அடுப்பில் சமைக்க தொடங்கி விட்டார்கள். எங்கள் வீட்டில் எப்பொழுதும் விறகு அடுப்புத்தான். அதனால் இதன் பாதிப்பு எங்களுக்குத் தெரியவில்லை. சைக்கிளின் வேகத்தை அதிகமாக்கினேன். அடுத்து வந்த பெற்றோல் நிலையத்தில் மண்ணெண்ணெய் வாங்குவதற்காக அங்கேயும் நீண்டதொரு வரிசை காத்திருந்தது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஐந்து லீற்றர் எண்ணெய் . அவர்களின் குடும்பகாட் பார்த்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்த வரிசையில் வயது போனவர்களும், சிறுவர்களும் அதிகமாக இருந்தார்கள். அதிகாலையிலேயே வந்து காத்திருப்பார்கள் வெயில் உச்சத்துக்கு வந்தாலும் அசைய மாட்டார்கள். சண்டை நடந்தபோது உயிரோடு இருக்க வீட்டை விட்டு ஓடினோம். கோவிட் வந்தபோது உயிருக்குப் பயந்து வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தோம். இன்று உயிர் வாழ எல்லோரும் வீதியில நிற்கிறோம். பார்க்கும் இடமெல்லாம் நீண்ட வரிசைகள். பொருட்களின் தட்டுப்பாட்டாலும் விலையேற்றத்தாலும் மக்கள் படும் துன்பம் கணக்கில்லாமல் நீண்டு கொண்டே போகிறது. நினைவுக்குள் என் கடை முதலாளி வந்தார். பொருளாதார நெருக்கடி வந்ததும் சாமான்களின் விலை இரண்டு மடங்கு அதிகமாகிவிட்டது. இவர் மூன்று மடங்கு விலை சொல்லுவார். இப்போதெல்லாம் அடிக்கடி அவரோடு வாக்கு வாதம் வருகிறது. ஈவிரக்கம் இல்லாமல் சாமான்களின் விலையைக் கூட்டிச் சொல்லும்போது கோபம் வருகிறது. அவசரத்துக்குக்கூட கடன் கொடுக்கமாட்டார். நேற்று கடைக்கு கைக் குழந்தையோடு ஒரு அம்மா வந்திருந்தார். ஆயிரம் ரூபா தந்து அங்கர்மா பெட்டி கேட்டார். நான் முதலாளியை பார்த்தேன்.

“என்ர மூஞ்சியை ஏன் பாக்கிறாய். மாப்பெட்டி ஆயிரத்தி இருநூறு ரூபா. மீதி இருநூறை வாங்கிக் கொண்டு ஒரு பெட்டி குடு” என்றார்.

“இருந்த காசைக் கொண்டு வந்தனான் அண்ணை. மிச்சக் காசை பிறகு கொண்டு வந்து தாறன். பிள்ளைக்கு மா வேணும்” அந்தப் பெண் தன் குழந்தையைப் பார்த்தபடி சொன்னார்.

“கஷ்டம் எண்டு வந்து கேக்கிறவைக்கெல்லாம் கடன் குடுத்தால் நான் என்னண்டு கடையை நடத்துறது. காசு தந்திட்டு வாங்கிக்கொண்டு போங்கோ” பட்டென்று சொல்லி விட்டு உள்ளே போனார். நான் அவர் பின்னால் போனேன்.

“அண்ணை விலை ஏற முதல் வாங்கின மா பெட்டியள். ஆயிரம் ரூபாவுக்கு குடுத்தாலும் நட்டம் வராது. குழந்தையைப் பாக்க பாவமாயிருக்கு அண்ணை” என்றேன்.

“வாயை மூடிக் கொண்டு உன்ர வேலையை ஒழுங்காய் பார் இல்லையெண்டால் கலைச்சுப் போடுவன்” பல்லை நெருமியபடி உறுமினார். திரும்பி அந்த அம்மாவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தேன். பிள்ளையோடு படியிறங்கிப் போய்க் கொண்டிருந்தார். ஆற்றாமையோடு முதலாளியைப் பார்க்க அவர் ஒன்றும் நடவாதமாதிரி கொப்பியில் கணக்கு எழுதிக் கொண்டிருந்தார். இப்படி மனதை நோக வைக்கும் சம்பவங்கள் நிறைய நடக்கிறது. என்னால் என்ன செய்ய முடியும். வருமானத்திற்காக எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. கடைக்கு வந்து சேர்ந்தபோது வாசலில் முதலாளி நின்றிருந்தார்.

"வெள்ளன வா எண்டு சொல்ல ஆடி அசைஞ்சு வாறாய். சனம் வந்து காவல் நிக்குதுகள் கெதியாய் போடா போய் வேலையைப் பார்" கத்திய சத்தத்தில் அங்கு நின்றவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். தலை நிமிராமல் உள்ளே போய் வேலையைத் தொடங்கினேன். சனங்கள் வந்து கொண்டிருந்தாலும் சாமான்களின் விலையேற்றத்தால் வாங்கும் அளவு குறைந்திருந்தது. ஐம்பது கிராம் நூறு கிராம் என்று வாங்குபவர்கள்தான் அதிகம்.

"இனி வாற ஆக்களை நான் பாக்கிறன். இரண்டு இடத்தில இருந்து ஓடர் வந்திருக்கு. ஒரு மணிக்கு முதல் குடுக்க வேணும் நீ போய் குடுத்திட்டு வா" சுட்டெரிக்கும் வெயிலில் அலைய வேண்டுமே என்ற சலிப்பு வந்தபோது வீதியில் நாள் முழுவதும் வெயிலையோ மழையையோ பொருட்படுத்தாமல் நீண்ட வரிசையில் தவமிருக்கும் சனங்கள் நினைவுக்கு வந்தார்கள். ஓடர் வந்த இடத்தைப் பார்த்தேன். ஒன்று கரடிப் போக்குச்சந்தி. மற்றது பரவிப்பாஞ்சான். இரண்டும் இரண்டு திசை. முதல் கரடிப்போக்குச்சந்திக்குப் போக சாமான்களை எடுத்தேன்.

"குடுத்திட்டு உடன வா. சொன்ன நேரத்துக்கு குடுக்கவேணும்" தலையை ஆட்டியபடி சைக்கிளை எடுத்தேன். விலாசம் தேடி சாமான்களைக் கொடுத்து விட்டு வரும்போது காலையில் மண்ணெண்ணெய்க்காக நின்றிருந்த வரிசையைப் பார்த்தேன். பாதி குறைந்திருந்தது. வரிசையின் முன்னால் நின்ற ஆச்சி கண்ணில் பட்டாள். சீலைத் தலைப்பால் தலையை மூடியிருந்தாள். காலில் செருப்பு இல்லை எண்பது வயதிருக்கும்.

"சூட்டுக்கு காலெல்லாம் வெந்து போச்சு மயக்கம் வாறமாதிரி தலையும் சுத்துது. ஏலாமல் இருக்குது மோனை கெதியாய் எண்ணெயைத்தா" வாங்கிக் கொண்டு திரும்பினாள். இந்த வயதிலும் கஷ்டப்படுகிறாளே என்று நினைத்தபடி விரைந்தேன். திடீரென ஆச்சியின் அலறல் சத்தம் கேட்டது. மயங்கி விழுந்து விட்டாளோ.. பதறியபடி திரும்பிப் பார்த்தேன்.

"படுபாவி ஒரே இழுவையில பறிச்சுக் கொண்டு போட்டானே. கால்கடுக்க நிண்டு வாங்கினதை ஒரு நிமிசத்தில கொண்டு போட்டானே பாவி"

சுடுமணலிலிருந்து பெருங்குரலில் அலறிக் கொண்டிருந்தாள். சைக்கிளை விட்டு ஓடினேன். நிலைமையை ஊகித்துக் கொண்டேன். தட்டிப்பறிக்க எப்படி மனம் வந்தது. எடுத்துக்கொண்டு ஓடினவனைத் தேடினேன் கண்ணில் அகப்படவில்லை. சனங்கள் தங்கள் இடம் போய் விடுமோ என்ற அச்சத்தில் அசையாது நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"எடுத்தவன் ஓடிட்டான் ஆச்சி எழும்புங்கோ" விட்டிட்டுப் போக மனம் வரவில்லை.

"இருந்த காசையெல்லாம் பொறுக்கிக் கொண்டு வந்தன் எண்ணெய் இல்லாமல் எப்பிடி வீட்டுக்குப் போறது" இடுங்கிய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அடிபட விழுந்ததினால் எழுந்து நிற்க முடியவில்லை. சைக்கிளை கடை வாசலில் பூட்டி விட்டு ஆச்சியை கைத்தாங்கலாய் கூட்டிப்போய் பக்கத்திலுள்ள அவளின் வீட்டில் விட்டு வந்தேன். ஆச்சியின் கலங்கிய முகமே கண்ணில் நின்றது. சைக்கிளை வந்து எடுத்தபோதுதான் உடனே வாவென்று முதலாளி சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. நேரம் பார்ததேன் இரண்டுமணி கடந்து விட்டிருந்தது. கத்தப் போகிறாரே...

கடைக்குள் கால் வைத்ததும் நெருப்புக் கண்களால் சுட்டெரித்தார்.

"எங்கையடா போய் தொலைஞ்சனி. சொன்ன நேரத்துக்கு குடுக்க வேணும் எண்டு உனக்கு சொன்னனான்தானே. ஓடர் தந்தவன் இரண்டு மூண்டுதரம் போன் பண்ணினான் குடுக்காததால ஓடரை கான்சல் பண்ணிட்டான். உன்னால என்ர வியாபாரம் போச்சு"

"கியூவில நிண்டு வாங்கின மண்ணெண்ணையை ஒருத்தன் பறிச்சுக் கொண்டு ஓடிட்டான். பாவம் அந்த ஆச்சி விழுந்த வலியில துடிச்சுக் கொண்டிருக்க என்னெண்டு விட்டிட்டு வாறதண்ணை. அதுதான் வீட்டில விட்டிட்டு வாறன்"

"என்னட்ட சம்பளம் வாங்கிக் கொண்டு ஊர் உத்தியோகம் பாக்கிறாய். உன்னையெல்லாம் வைச்சுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விமல் பரம்**

கொண்டு கடையை நடத்தேலாதடா. என்ன சொன்னாலும் எதிர்த்துக் கதைக்கிறாய். உன்னோட கத்திறதே எனக்கு வேலையாய்ப் போச்சு. வேலை கேட்டு கெஞ்சிக் கொண்டு வருவியள் பழகிட்டால் திமிர் வந்திடும். எனக்கு உது சரிவராது. ஒழுங்காய் இரு இல்லையெண்டால் கலைச்சுப் போடுவன்" கத்தினார். கோபத்தை அடக்கிக் கொண்டு உள்ளே போனேன். வேலை முடியும் நேரம் கடைக்கு சாமான்கள் வந்தது. எல்லாவற்றையும் எடுத்து உரிய இடங்களில் அடுக்கினேன். அரிசி மூட்டைகளை உள் அறையில் வைக்கச் சொன்னார் வைத்து விட்டு வீட்டுக்கு கிளம்பினேன். அடுத்தநாள் கடை திறக்க முதலே வந்து முதலாளிக்காக காத்திருந்தேன். அவர் வந்ததும் கடை திறந்து உள்ளே போக என் அருகில் வந்து மெல்லச் சொன்னார்,

"அரிசி கேட்டால் இல்லை எண்டு சொல்லு. விலை ஏறப் போகுதாம் பார்த்துக் குடுப்பம்" இதுக்குத்தான் வந்த அரிசி மூட்டைகளை உள் அறைக்குள்வைக்கச்சொன்னாரா...

"வேண்டாம் அண்ணை. ஏற்கனவே நூறு ரூபாவிற்கு வித்த அரிசி முன்னூறுக்கு உயந்திட்டுது. இதுக்கு மேலையும் கூட்டி வித்தால் சனங்கள் பாவமண்ணை. பசியோட வந்து கேக்கேக்கை வைச்சுக் கொண்டு இல்லையெண்டு என்னெண்டு சொல்லுறது. அதுகளின்ர வயித்தெரிச்சல் எங்களைச் சும்மா விடாது" என்னை மீறிய படபடப்போடு சொன்னேன். இன்று வரும்போது, டீசல் இண்டைக்கு வந்திடுமாம் அடிச்சுக் கொண்டு வீட்டை போகேக்க அரிசி சாமான்கள் வாங்கிக் கொண்டு போகவேணுமடா. அரிசிக்கும் தட்டுப்பாடாம் உங்கட கடையில அரிசி இருக்கோ என்று வரதன் அண்ணை கேட்டதும் இருக்குது வாங்கோ என்று நான் சொன்னதும் ஞாபகத்திற்கு வந்தது. நாலு நாளாய் கியூவில் காத்திருந்த களைப்பும் நித்திரையின் மையும் பசியுமாய் வரும் அவரிடம் அரிசி இல்லையென்று எப்பிடிச் சொல்லுவேன் என்னால் முடியாது.

"கடைக்கு நான் முதலாளியோ இல்லை நீயோ. பேசாமல் நான் சொன்னதைச் செய்" என்றார்.

"காலமை வரேக்க வழியில கேட்டவைக்கு இருக்கு எண்டு சொல்லிப் போட்டனண்ணை. நம்பி வருவினம் குடுப்பம் அண்ணை" கெஞ்சாத குறையாய் கேட்டேன்.

"வாயை மூடு. கடை நடத்த எனக்குச் சொல்லித்தாறியோ. நீ என்ன சொல்லுவியோ எனக்குத் தெரியாது இண்டைக்கு அரிசி குடுக்கிறதில்லை" கோபத்தோடு கத்தினதைக் கேட்டு எனக்கு வெறுத்தே போய்விட்டது.

"இது உங்கட கடையண்ணை நீங்கள் விரும்பினபடி நடத்துங்கோ. கோவம் வந்தால் கலைச்சுப் போடுவன் எண்டு நெடுகவும் சொல்லுறீங்கள். நீங்கள் கலைக்கவேண்டாம் நானே போறன். இதையெல்லாம் பாத்துக்கொண்டு என்னால வேலை செய்யேலாது. நாங்கள் நல்ல மனசோட நியாயமாய் நடந்தால்தான் எங்கட குடும்பம் நல்லாய் இருக்கும். ஏனோ தெரியேல குடும்பத்தைக் குறை இல்லாமல் பாக்க வேணுமெண்டு உழைச்ச அப்பா விழுந்து படுக்கையில கிடக்கிறார். படிக்க ஆசைப்பட்ட எனக்கும் படிப்பு கிடைக்கேல தங்கச்சியையாவது படிக்க வைக்க வேணும் எண்டு ஆசைப்படுறன். அதுக்கு நேர்மையாய் இருக்கவேணும். இப்பிடி உழைக்கிற காசு எனக்கு வேண்டாம் அண்ணை. வீட்டில இப்ப படுற துன்பமே போதும் இனி ஏதாவது வந்தால் எங்களால தாங்கேலாது. இண்டையோட நான் போறன் நீங்கள் வேலைக்கு வேற ஆளைப் பாருங்கோ" துணிந்து சொல்லிவிட்டு என் வேலையைத் தொடங்கினேன்.

முகத்தில் அறைந்தது போல் திகைத்து நின்றவர் மனதில் பாரிசவாதத்தால் படுக்கையில் இருக்கும் அவரின் தாயின் நினைவும் அவர் படும் துன்பமும் நினைவுக்கு வந்திருக்குமோ என்னவோ இறுகிய முகத்தோடு ஒன்றும் சொல்லாமல் தன் இருக்கையில் போயிருந்தார். மாலை ஆறுமணியாகி விட்டது. இந்த நேரத்தில்தான் கடைக்கு நிறைய பேர் வருவார்கள். வந்தவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தாலும் மனம் அமைதியில்லாமல் கொதித்துக் கொண்டிருந்தது.

"அரிசிக்கும் தட்டுப்பாடு வந்திட்டுது எனக்கு இரண்டு கிலோ அரிசி தாங்கோ" வரதன் அண்ணையின் குரல் திடுமெனக் கேட்கவும் திக்கென்றது. இருந்த அரிசியெல்லாம் குடுத்து முடிஞ்சுது என்று சொல்ல வாயெடுத்தேன் அதற்குள்

"அரிசி மூட்டையை எடுத்து வந்து பழைய விலைக்கு குடு செல்வம்" என் பெயரோடு சொன்னார் முதலாளி . ஒரு நிமிடம் உறைந்து நின்றேன். அடுத்த நொடி

"வாங்கோ வாங்கோ அரிசியிருக்குது" உரத்த குரலில் சொல்லிவிட்டு அரிசி மூடையை அறையிலிருந்து வெளியே எடுத்து வைத்து விட்டு நிமிர்ந்து பார்த்தேன். வரதன் அண்ணையை எதிர்பார்க்க அவர் பின்னால் ஒரு வரிசை மெல்ல நீண்டு கொண்டு போனது.

மனநிறைவோடு என் வேலையைத் தொடங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலெக்ஸ் பரந்தாமன்

# படிப்பும் பாதிப்பும் 1

**கதை: செல்வாக்கு ஆசிரியர்: சண்வேல் சிறுகதை மஞ்சரி (ஐப்பசி) 2022**

"மக்களிடம் வாக்குப்பெற்று, அந்த மக்களுக்கே தொகுதி எம்பியாகி, அந்த எம்பி பதவி மூலம் வாக்குப்போட்ட மக்களுக்கே வயிற்றிலடித்து... ஏப்பமிடும் அரசியலாளர்களும் அவர்தம் எடுபிடிகளும் கூடிவாழும் ஒருதேசத்தின் சூழலில் ஒரு விளிம்பு நிலை மனிதனின் வாழ்வானது, எவ்வளவு அவலமும் அழுகையும் நிறைந்தவை என்பது மேற்குறிப்பிட்ட அந்த இருபகுதியினருக்கும் தெரியாததொன்றல்ல.

இருப்பினும், தம் சுயநலன் சார்ந்த அரசியலூடாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளால் தமக்குச் சுகபோக வாழ்வினையும், தமக்காகக் கொடிபிடித்துக் கோசம் எழும்பும் ஆர்ப்பாட்ட ஊர்வல ஆதரவாளர்களின் வாழ்வு நீட்சியை மேம்படுத்துவதற்காகவும் அப்பாவி மக்களின் ஏழை வாழ்வியலோடு விளையாடும் மனிதர்களை வெளிக்கொணருகிறது ஒரு சிறுகதைப் படைப்பு!

2022, ஐப்பசிமாத 'சிறுகதை மஞ்சரி'யில் சண்வேல் அவர்களால் எழுதப்பட்டிருக்கும் 'செல்வாக்கு' எனும் சிறுகதை, அரசியல் வட்டத்துக்குள் நிலவும் அதிகாரப் போக்கானது, வறுமைப்பட்டு நிற்கும் ஒரு தினக்கூலியின் குடும்பத்தையும் அவனது மன உணர்வுகளையும் எப்படிச் சிதைத்து விடுகிறது... என்பதைக் கதையின் ஆசிரியர் ஒரு தனவந்தர் பாத்திரமூடாக வாசகனுக்கு மிகத் தெளிவாகப் புரிய வைத்து விடுகிறார்.

போர்க்கால வாழ்வினுள் மனரீதியாகப் புதைந்து போனவர்கள் அதிகம். சொத்திழந்து... சுகமிழந்து... உற்றம்சுற்றம் பலதையும் இழந்து... அநாதரவான நிலையில், வெறுங்கையுடன் இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் ஆயிரத்தொகைக்கும் அதிகமானவர்கள். இவர்கள் மூன்று வருடத்தின் பின்பு, தமது சொந்த நிலங்களுக்கு குறிப்பாக வன்னிப்பெருநிலப்பரப்பிற்கு மீள் குடியேற்றமாக வந்திறங்குகிறார்கள். இதன்பின் போரில் இடிந்தழிந்துபோன இவர்களின் இல்லங்களை மீளக்கட்டிக் கொடுப்பதற்கான 'வீட்டுத்திட்டம்' ஒன்று உலகநாடுகளின் உதவியுடன் அரசாங்கத்தால் உருவாக்கப்படுகிறது.

ஆனால், இந்த வீட்டுத்திட்டத்தின் பிரகாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரியமுறையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டனவா? என்பதையே அலசுகிறது இந்தக்கதை.

மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளுடன் தினக்கூலியாக வாழும் கதிரேசன் என்பவன், போரினால் பாதிக்கப்பட்டு மீண்டும் தனதூரில் குடும்பத்தோடு வந்து குடியேறுகிறான். எட்டுவருடங்களாக மழைக்காலங்களில் அவன் எதிர்நோக்கும் அவலங்களின் நிமித்தம், அப்பகுதிக் கிராமசேவகரிடம் அடிக்கடி சென்று, தனது இடர் நிலைமையை ஞாபகப்படுத்தி வருகிறான். இறுதியாக, இவனது பரிதாபத்தைக்கண்டு மனமிரங்கும் கிராமசேவகர், உடனே மேலிடத்தோடு தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார். அவனது விடையத்தைக் கதைத்தபின்பு, அவர் அவனிடம் - தனது பிரிவில் பத்துப்பேருக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் இப்போது அதனுடன் மேலதிகமாக ஒரு வீட்டு உரிமையாளரின் பெயரையும் இணைக்கலாம் என்றும், அந்த இணைப்புக்கு அவனது பெயரைப் பரிந்துரைப்பதாகவும் கூறியபோது, கதிரேசன் மனமகிழ்வோடு வீடு திரும்புகிறான்.

அதன்பின் கதிரேசன் வேலைசெய்யும் இடத்தின் முதலாளி கிராமசேவகரின் அலுவலகத்திற்கு, எம்பி ஒருவரின் கடிதத்தோடு உள்நுழைகிறார். ஊரிலே அவர் ஒரு தனவந்தர் என்பதால், கிராமசேவகர் 'எழுந்து நின்று' அவரை வரவேற்று உட்கார வைக்கிறார். தனவந்தர் கொடுத்த கடிதத்தைப் படிக்கும் கிராமசேவகர், இந்தமுறை பத்துப்பேருக்குத்தான் வீட்டுத்திட்டம் வந்ததாகவும், மேலதிகமாக ஒன்று இருப்பதை கதிரேசனுக்குக் கொடுக்கப்போவதாகவும் கூறுகின்றபோது... தனவந்தரோ எம்பியின் கடிதத்தைச் சுட்டிக்காட்டி,

" என்ர வீட்டை மகளுக்கு எழுதிப்போட்டன். என்ர பேரிலை இன்னொரு காணி இருக்குது. அதிலதான் வீடுகட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலெக்ஸ் பரந்தாமன்

வேணும்..." என்று கூறிவிட்டு, நகர்ந்து விடுகிறார்.

கிராமசேவகருக்கு எதுவும் செய்ய முடியாத நிலை. ஒருபக்கம் எம்பியின் கடிதம். மறுபக்கம் வீடில்லாத கதிரேசனின் ஏழ்மைமுகம். சிறிதுநேரத்தின்பின், குறித்த வீட்டுத்திட்டப் பயனாளிகளின் பட்டியலில் தனவந்தரின் பெயர் இணைக்கப்பட்டிருப்பதாகவும், கதிரேசனின் பெயர் நீக்கப்பட்டிருப்பதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து கிராமசேவகருக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

கிராமசேவகர் தனது இயலாமையை நினைத்து மனம் குமையும் அதேவேளை, கதிரேசன் இனித் தனக்கு வீடு கிடைத்துவிடும்.. என்ற சந்தோஷத்தில் அன்று மாலைப்பொழுதில் வேலையை முடித்துக்கொண்டு, மனைவி பிள்ளைகளுக்காக கடையில் தின்பண்டங்களும் வாங்கிக்கொண்டு வீட்டிற்குப் போகிறான் சந்தோஷம் கொண்டாட.

இக்கதையிலே ஆசிரியர் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டுகின்றார்! பாதிக்கப்பட்டு நிற்கும் ஏழை மக்களுக்கும் அரசியலாளர்கள் மற்றும் அவர்களது 'எடுபிடி'களுக்கும் இடையில், 'செல்லாக்காசு'போல் செயலிழந்து... செயற்படும் கிராமசேவகர்களது நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது என்பதே அது.

இக்கதை ஒரு புனைவு அல்ல! எங்கோ... எவர் கண்களுக்கும் புலப்படாமல் நிகழ்ந்த, நிகழ்ந்து கொண்டிருக்கிற ஒருவிடயத்தை, தனது 'கூரிய பார்வை' மூலம் ஊடுருவி, அதை எழுத்துகளாக்கி பொதுவெளியில் 'கொளுத்தி'ப் போட்டிருக்கிறார் ஆசிரியர்.

கதையின் முன்பகுதி கதிரேசனின் குடும்ப நிலைமையை விபரிக்கும் அதேவேளை, பிற்பகுதியில் மையங்கொள்ளும் நிகழ்வு... படிப்பவர்களின் மனதை அதிரச் செய்கிறது.

மக்களின் வாக்குகளில் 'தலை நிமிர்ந்த' எம்பிக்களும்... அவர்களது தம்பிக்களும்...கிராம சேவகர்களும்... கதிரேசன்களும்... தனவந்தர்களும்... வெறுமனே கதைகள் அல்ல. அதன் முடிவுகளும் 'யாவும் கற்பனை' என்று கூறிக் கடந்து விடக் கூடியனவும் அல்ல. இங்கே ஓர் உண்மை விழிப்புக்கொண்டு எழுந்திருக்கிறது. அவ்வளவுதான்!

பாதிக்கப்பட்ட மக்களின் பக்கம் ஆசிரியரின் பேனா திரும்பியிருப்பது பாராட்டுக்குரியது.

## ஆரியன்

மகனே சிம்மா! கிழக்கு பஞ்சாயத்து ராஜ்யங்களிலிருந்து (குடியரசுகள்) வரும் மாணவர்களுக்குக் கல்வி போதனையளிப்பதில் நாங்கள் விசேச சிரத்தையைக் காட்டி வருகிறோம். அதற்குக் காரணம் என்ன தெரியுமா? அவர்களே கிழக்கில் ஆரியக்கொடியை உயர்த்திப் பிடித்து ஆரிய தர்மத்தைக் காப்பாற்றப்போகிறார்கள் என்று நாங்கள் நம்பிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் சுதந்திர மனிதர்கள். ஆரியர்கள். ஆரியர்களெனப் படுவோர் எல்லோரும் சுதந்திரர்களாக இருக்க வேண்டுமென்பதே எங்கள் விருப்பம். எங்களது முன்னோர்களில் சகோதரர்களும்உறவினர்களுமான சிலர் கிழக்குப் பிராந்தியங்களுக்குச் சென்று ஆரிய ஆசார அனுஸ்டானங்களை விட்டுவிட்டு , குரு , பாஞ்சாலக் குடியரசுகள் இருந்த இடத்தில் யதேச்சிகார ஏகாதிபத்தியங்களை ஸ்தாபித்தார்கள். அப்போதிருந்து நாங்கள் அவர்களைத் தாழ்ந்தவர்களாகவே மதித்து வருகிறோம். அவர்கள் தங்களை ஆரியர்கள் என்று அழைத்துக் கொண்டாலும் நாங்கள் அதை ஒப்புக் கொள்வதில்லை. ஆரிய வர்க்கமென்பது இதுவே. இங்கேதான் ஆரிய தர்மம் அமுலிலிருக்கிறது. ஆரியர்களின் நிற ரூபத்தை இந்த ஆரிய வர்க்கத்தில்தான் காணமுடியும். குமாரா! கிழக்கு ராஜ் யங்களின் மாணவர்களை நாங்கள் அன்போடும் கனிவோடும் நடத்துவதற்கு இதுவே காரணம். எங்களது நிறம்போலவே இருக்கிறது. மஹாலிலிச்சவி அவ்விதமே இருக்கிறான். பந்துல மல்லன் கூட அப்படித்தான். ஆனால் பிரசேனஜித்துவைப் பார்த்தவுடனேயே கலப்பு நிறத்தவன் என்பது தெரிந்துவிடுகிறது.

**சிந்து முதல் கங்கை வரை**
**ராகுல சாங்கிருத்தியாயன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சைத் தொடும் உண்மை

கமலினி கதிர்



கதிரவனுக்கும் மழைக்கும் என்றுமே ஒத்துவருதில்லை. ஒருவர் வரும் இடத்துக்கு மற்றவர் வர விரும்புவதில்லை. அபூர்வமாக ஒன்றாக வந்திருப்பின் வானமங்கை அச்சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாக்கி வண்ணங்களைக்குழப்பி ஓவியம் வரைந்துவிடுவாள். அந்தச் சொற்பநேரம் கவிஞர்கள், ஓவியர்களை மட்டுமன்றி மனிதப் பிறவி எடுத்த அனைவரையுமே அந்த வானவில் கட்டிப் போட்டு விடும். அந்த அழகுகூட ஆதிரையை அசைக்கவில்லை. எலும்பு இல்லாத நாக்கால் எது வேண்டுமென்றாலும் சொல்லிடலாமா? என்றைக்கோ ஒருவரை காதலித்ததற்கு இப்போது தண்டனையா? காதலில் தோற்றவர்கள் யாருமே திருமணம் செய்வதில்லையா? என்று காதல் தோற்றதோ அன்றே அவனை மனதிலிருந்து தூக்கி எறிந்திருந்தாலும் அதை எவ்வாறு நிரூபிக்க இயலும். இருக்கும் ஒன்றை நிரூபிக்கலாம். இல்லாததொன்றை எப்படி நிரூபிக்க முடியும்? கணவன் எறிந்துவிட்டுப்போன நெருப்புத் துண்டங்கள் போன்ற குரூர வார்த்தைகளை ஜீரணிக்க முடியாமல் அவள் திணறினாள்.

திருமணமாகி ஆரம்ப காலங்களில் மகிழ்ச்சியாகத்தான் வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது. யாழிலிருந்து ஜேர்மனிக்கு வந்து நான்கு மாதங்கள் மணவாழ்க்கை தித்திப்பாகத்தான் இருந்தது. என்றைக்கு பழைய மாணவர் ஒன்றுகூடலுக்குப் போய்வந்தார்களோ அன்று தொடங்கியது பிரச்சனை. பாடசாலை நாட்களில் அந்தப் பதின்ம வயதில் காதலித்தது இன்று பூதாகாரமாக வந்து நின்று அவள் வாழ்க்கையையே விழுங்கத் தொடங்கியிருக்கிறது. ஒன்றாகப் படித்த சந்திரவதனா ;என்னடி! நீ காதலித்தவனைக் கல்யாணம் செய்யாவிட்டாலும் உனக்கு நல்ல வடிவான பணக்கார வெளிநாட்டு மாப்பிள்ளை கிடைத்திருக்கே. நீ நல்ல லக்கியடி; என்று ஆரம்பித்து பழைய கதைகளை எல்லாம் ஆதிரையின் கணவன் ஜெகனுக்கு சொல்லத் தொடங்கி விட்டாள். ஆதிரை பலதடவை ஜாடை காட்டினாலும் புரிந்து கொள்ளாமல் வேண்டுமென்றே சொல்பவள் போல் சொல்லிக் கொண்டே போனாள். சந்திரவதனா எப்போதுமே இப்படித்தான். வேண்டாத கதைகளையெல்லாம் பேசிக்கொண்டேயிருப்பாள். யாருக்கு எது சொல்வதென்ற விவஸ்தையே கிடையாது. இப்போது இந்தக் கதைகள் அவசியந்தானா? கடிதங்கள் பரிமாறியதும் கண்ணால் பேசினதும் தவிர ஒருவரையொருவர் சந்தித்ததோ பேசியதோ எதுவுமில்லையே. ஆதிரையின் வாழ்க்கையைப் புரட்டிப் போட வேண்டுமென்று கங்கணம் கட்டியவள் போல் சந்திரவதனா ஒன்றும் இல்லாத கதைக்கு தன் கற்பனையைக் கூட்டிச் சொல்லிக் கொண்டே போனாள். அவள் என்ன நோக்கத்திற்காகச் சொன்னாளோ அது விரைவிலேயே பற்றிக்கொண்டு எரிந்தது.

ஆதிரையின் அப்பா தமிழ் ஆசிரியர். கொக்குவிலில் எல்லோருக்குமே அவரைக் கண்டால் உதறல் எடுக்கும். கண்டிப்பானவர். பாடசாலையில் மட்டுமல்ல வீட்டிலும் அவர் இருக்கும் வேளைகளில் எல்லோருமே அம்மா உட்பட நடுங்கிக் கொண்டேயிருப்பார்கள். அவரைப் பார்த்து எது சொல்லவும் யாருக்கும் தைரியம் வந்ததில்லை. வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பார்கள். அப்பாவின் காலடியோசை கேட்டதும் திசைக்கொருவராக மறைந்து விடுவார்கள். அப்பா இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலினி கதிர்

நேரங்களில் தங்கை பாடுவாள். அவர் காலடி ஓசையிலே எங்கள் மூச்சு நின்றுவிடும் மலர்களின் வாசமெல்லாம் ஒரு மாலைக்குள் வாடிவிடும். அவர் பார்வையை நாம் அறிவோம். அந்தப் பார்வை எமை பொசுக்கிவிடும். அவள் பாட்டை நாங்கள் அம்மா உட்பட கேட்டு இரசித்து சிரிப்போம். மூன்றும் பெண் பிள்ளைகளானதால் வெகு கண்டிப்புடனிருப்பார். யாரும் அவர் துணையின்றி வெளியில் போனதுகூட கிடையாது. எல்லாப் பிள்ளைகளும் ரியூசன் என்று எங்கெங்கோ எல்லாம் போய்வர நாங்க மட்டும் அப்பாவிடம் மட்டுமே கேட்டுப் படித்துக் கொண்டிருந்தோம். அப்படியும் காதலித்து அதை வீட்டில் சொல்லக்கூடத் தைரியமில்லாமல் அப்பா காட்டியவனையே கல்யாணமும் செய்தாகிவிட்டது. என்றைக்கு கல்யாணம் முடிவானதோ அன்றே காதலித்தவனை மறந்தும் போயாச்சு. ஆதிரையின் மனம் தாங்கள் வாழ்ந்த வாழ்வை நினைத்தது. ஆதிரையின் அப்பா பேசமாட்டார். ஆனால் பார்வையே கடுமையாக இருக்கும். அன்பாக அவர் பார்த்ததோ பேசியதோ கிடையாது. கல்யாணம் நடந்த நாளிலிருந்து கணவனின் அன்பு பேச்சுக்களில் குளிர் காய்ந்தவளுக்கு இப்போது கணவனின் கொடூரப் பேச்சு தாங்க முடியாததாக இருந்தது. வீட்டுக்குத் திரும்பிய நேரத்திலிருந்து குத்தல் பேச்சுகளும் மனதை ரணமாக்கும் வார்த்தைகளும் கேட்டுக் கேட்டு ஆதிரை நொந்து போனாள். இந்தக் காலத்தில் இதைப்போய் பெரிதாக எடுப்பாரென்று அவள் நினைக்கவில்லை. எத்தனை பெண்கள் காதலித்தது ஒருவனை கல்யாணம் செய்தது இன்னொருத்தனை என்று சந்தோஷமாகத் தானே வாழ்கிறார்கள். இன்று புரிகிறது அது காதல் இல்லை. வெறும் பாலினக் கவர்ச்சிதானென்று. இப்போது புரிந்து என்ன பயன்?

அவனைக் காதலித்ததை ஏன் மறைத்தாய்? எங்கெல்லாம் அவனுடன் சுற்றினாய்? ஏன் சொல்லவில்லை என்பதுடன் கீழ்த் தரமாக வேறு பேசிக் காயப்படுத்தினான். கேட்டுக் கேட்டு வேதனைப்படுத்தினான். நான் அவனுடன் பழகியதுகூட இல்லை. ஆனபடியால் சொல்ல வேண்டுமென்று தோன்றேல்லை என்று பலதடவை அவள் சொல்லியும் அவன் ஏற்கத் தயாராய் இல்லை. எப்போதும் தேள் போலக் கொட்டும் அவன் வார்த்தைகளை உள்வாங்கவும் முடியாமல் யாரிடமும் சொல்லி ஆறுதல் பெறவும் முடியாமல் திணறுவாள். ஒரேயொரு பெரியப்பா அவர்கள் இருந்த இடத்திலிருந்து வெகு தொலைவில் இருந்தார். அவரோடு அவளுக்கு அவ்வளவு பரிச்சயம் இல்லாததால் அவளால் தொலைபேசியில் கூட தன் சோகங்களை அவரிடம் பகிர முடியவில்லை. அவனது காயப்படுத்தும் வார்த்தைகளை எல்லாம் மென்று விழுங்கிக் கொண்டிருந்தாள். ஆனாலின்று எல்லை மீறி செத்து விடலாம் போல் இருந்தது. தற்கொலை செய்து விடவேண்டுமென்ற எண்ணம் மெல்லமெல்ல வலுத்துக் கொண்டே போனதன் விளைவு அவன் இல்லாதபோது மருந்தகத்திற்குப் போய் பொய் கூறி தூக்கமாத்திரைகளை வாங்கி வந்திருந்தாள். ஜேர்மனியில் இப்படி மருந்துகளை வாங்குவது சுலபமில்லை என்றாலும் வாங்கி விட்டாள். மனம் அடிக்கடி சாவைப்பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டு இருந்தது. தன் கவலையைச் சொல்லி ஆறுதல் தேடவும் பக்கத்தில் யாருமின்றித் தவித்தாள். எப்படித் தான் களங்கம் இல்லாதவள் என்று நிரூபிப்பதென்று அவளுக்கு புரியவில்லை. இருக்குமொன்றை நிரூபிக்கலாம். ஆனால் இல்லாத ஒன்றை எப்படி நிரூபிப்பது? அவனுக்கு எப்படிப் புரிய வைப்பது? விழுங்கி விட்டாள். அவளது வீட்டுக்கு அந்தநேரம் வந்திருந்த உறவினர் ஒருவர் நிலைமையை உணர்ந்து காலம் தாழ்த்தாமல் வைத்தியசாலை சென்றதால் காப்பாற்ற முடிந்தது.

வைத்தியர் மனநல ஆலோசகரைப் பரிந்துரை செய்து தமிழர் ஒருவரை அழைத்தது விளக்குவதில் சிரமம் ஏற்படவில்லை. அவர் மென்மையாக ஆனால் ஆழமாகச் சொன்னார். நடுத்தர வயதைக் கடந்த தென்னிந்தியர். அவர் ஏனம்மா இப்படி முடிவெடுத்தாய்? என்று கேட்கத் தொடங்கவே ஆதிரைக்கு தன்னை அன்போடு ஒருவர் கேட்டது தாங்கமுடியாமல் பொல பொல எனக் கண்ணீர் வழிந்தோடக் கணவன் சந்தேகப்பட்டதும் குத்திக்குத்திப் பேசுவதையும் கேவிக்கேவிச் சொல்லி முடித்தாள். நடுவே குறுக்கிடாமல் முழுக்கதையையும் ஆதரவாகக் கேட்டவர் எல்லாவற்றையும் பொறுத்துப்போக வேண்டும். அது விதி என்று சொல்லி பெண் குழந்தைகளை வளர்க்காதீர்கள். அது அவர்கள் மனதில் வேரூன்றி கணவன் எத்தகைய கொடுமைகள் செய்தாலும் தாங்கித்தாங்கி முடியாத பட்சத்தில் தற்கொலையை நாடுகிறார்கள். தன்மானத்தை ஒருவர் தீண்டும்போது சீறிக்கொண்டு கோபப்பட வேண்டும். ஆணுக்கு பெண் அடிமையில்லை. திருமணம் செய்து கொண்டதற்காக எல்லாவற்றையும் தாங்கி ஏற்க கூடாது என்ற கருத்தை அவர்கள் மனதில் விதையுங்கள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம். எம். எம். இப்றாகீம்**

என்று அந்த உறவினருக்கும் ;மணவாழ்க்கை மட்டுமே வாழ்க்கையில்லை. அதைக் கடந்து எவ்வளவோ நல்ல விடயங்கள் இருக்கின்றன. ஒருத்தியை உயிரோடு புதைத்துவிட்டு தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போகும் கணவனை ஒரு பொருட்டாக நினைத்து உங்கள் வாழ்க்கையை வீணாக்காதீர்கள். உன்னை அவருக்கு நிரூபிக்க வேண்டிய எந்த அவசியமும் உனக்கில்லை. முரண்பாடுகள் எல்லைமீறிப் போகும்போது விட்டுப்பிரிந்து உங்களுக்கான வாழ்வை வாழ்வதில்தான் நீங்கள் பிறந்ததற்கான அர்த்தம் தொடங்குகிறது. உங்களைப் பெற்றவர்கள், உறவினர், நண்பர்கள் என்று உங்களைச்சுற்றி எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். உங்கள் அன்பை உதாசீனம் செய்பவர்களை, உங்களை சந்தேகித்து வதைப்பவர்களை நினைத்து வாழ்க்கையைத் தொலைப்பதை விடுத்து உங்கள் அன்பு தேவைப்படுபவர்களுக்கு உதவுங்கள்; என்று ஆதிரைக்கும் கூறினார். மனதை மயிலிறகால் தடவுவதுபோல மென்மையாக அவர் கூறியது ஆதிரையின் மனதில் சுருக்கென்று தைத்தது. ஓம். அவருக்காக நான் ஏன் உயிரை விட வேண்டும் கண்களில் உறுதி மின்னியது.

மன்சில் இரண்டு மாதங்களுக்கு முன்பு வாங்கிய காணியை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார். இரண்டு பெண் பிள்ளைகளுக்குத் தந்தையாகிய மன்சில் தனது முதலாவது பிள்ளைக்கு தனக்கு சீதனமாகக் கிடைத்த வீட்டை உடைத்து புதிய வீடொன்றைக் கட்டி முடித்து அரச உத்தியோகம் பார்க்கும் மாப்பிள்ளைக்குத் திருமணம் முடித்துக் கொடுத்து விட்டார். மற்றப் பிள்ளைக்கு வீடு கட்டுவதற்காக பழைய வீடொன்றுடன் இருந்த இந்த ஆறு பேர்ச் காணித்துண்டை ஒரு கோடி ரூபாவிற்கு இரண்டு கிழமைக்கு முன்புதான் வாங்கியிருந்தார். இதே காணியை கொழும்பில் வாங்குவதென்றால் சுமார் இரண்டு கோடி ரூபாவாவது தேவைப்படும்.

கொண்டிருக்கிறது.

தனது வீட்டுக்குள்ளிருந்து வெளியேறிய மனாறுத்தீன் “அஸ்ஸலாமு அலைக்கும் மன்சில் சேர்... நீங்க எங்கட பக்கத்து ஊட்டுக்காரரா வாறது சந்தோசமாயிருக்கி. நீங்க இந்த வளவ வாங்கின எண்டு கேள்விப்பட்டதிலிருந்து ஒங்கட ஊட்ட வந்து சந்திக்கத்தான் இருந்தன்...” என்று சொன்னவராக மன்சிலால் வாங்கப்பட்ட காணிக்குள் நுழைந்தார்.

“ஓம்... ஓம்... நானும்ஒங்கள சந்திக்க வேண்டுமெண்டுதான் இருந்தன். நாம ஒரு சேவயரக் கூட்டிக்கிட்டு வந்து காணிய அளந்து நம்ம ரெண்டு பேர்ட காணிர எல்லையைப் போட்டுக்குவம் எண்டு சொல்லுறத்துக்கத்தான் இருந்தன்...”

# எல்லை மீறும் ஆசை

இந்தக் காணியை விற்ற இஸ்மான் சொன்ன வார்த்தைகள் மன்சிலுக்கு இரண்டு கிழமையாக மன உளைச்சலை உண்டு பண்ணிற்று. “மன்சில் சேர்.... இதுட பக்கத்து வளவையும் நான்தான் மனாருத்தீனுக்கு வித்தன். நீங்க வாங்கின காணித் துண்டுக்குரிய ஒரு அடி நிலம் இப்ப அவர்ட வளவுக் குள்ளதான் இரிக்கி. இப்ப இரிக்கிற ஓலைக் கிடுகு வேலிய எடுத்திட்டு கல் மதில் கட்டக்குள்ள அந்த ஒரு அடி நிலத்தை யும் எடுக்கப் பாருங்க....”

இந்த வார்த்தைகளுக்கு தீர்வு காணும் விதமாகத்தான் உடனடியாகவே இரண்டு காணித்துண்டுகளையும் பிரித்து கல் மதில் ஒன்றைக் கட்டி அந்த ஒரு அடி நிலத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசைதான் கடந்த இரண்டு வாரங்களாக மன்சிலை ஆட்டிப்படைத்துக்

“எதுக்கு மன்சில் சேர் சேவயரெல்லாம்... இப்ப இரிக்கிற கிடுகு வேலிய கழட்டிப் போட்டு அந்த எல்லையில மதிலைக் கட்டுவோம். நாம ரெண்டு பேரும் வாற செலவை இரண்டாப் பிரிச்சுக்குவம்.... நாம எல்லாம் இந்த வளவுத் துண்டுகளை யெல்லாம் கொண்டா போகப் போறம்...” மனார்தீன் நிதானமாகப் பேசினார்.

“மதில் போடுற செலவ ரெண்டாப் பிரிசுக்குவம்... ஆனா... சேவயர் ஒருவரக் கூட்டிக்கந்து வளவுகள சரியா அளந்து மதிலப் போடுவம்...” மன்சில் பிடிவாதமாகவே இருந்தார்.

“மன்சில் சேர்... நான் சொல்லுறத கொஞ்சம் கேளுங்க... நீங்க வளவு வாங்கின இஸ்மானுக்கிட்டதான் நானும் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். எம். எம். இப்றாகீம்

பது வருசத்துக்கு முந்தி இந்த வளவ வாங்கினன்... நான் என்ர வளவ வாங்கக்குள்ள இப்ப நீங்க வாங்கின வளவுக்குள்ள இரிக்கிற வீட்டுட சுவருக்கும் பொது வேலிக்கும் இடையில இருந்த இடைவெளி ஒரு சைக்கிள உருட்டிக்கிட்டு போக ஏலாத இடைவெளிதான். இப்ப பாருங்க ஒரு திறீ வீலர் போகக்கூடிய இடைவெளி இரிக்கி... அந்த நேரம் வசதி வாய்ப்பில்லாததால என்னால கல் மதில் போட ஏலாமப் போச்சி... நானும் கொழும்பில வேலை செஞ்சதால வளவ வந்து அடிக்கடி பார்க்கவுமில்ல... மெல்ல மெல்ல ரெண்டு அடிக்கு கூடுதலான நிலத்த எனக்குரிய வளவில இருந்து எடுத்து வேலியக் கட்டியிருக்கிறார் இஸ்மான். அதுதான் இப்ப நம்மட எல்லையாப் போச்சி... இதுதான் உண்மை மன்சில் சேர்..." மனார்தீன் பேச்சு கடந்த கால நிகழ்வை படம் பிடித்துக் காட்டியது.

மனார்தீன் தொடர்ந்து பேசினார். "இன்னுமொரு விசயம் மன்சில் சேர்... ஒங்கட வளவுக்குள்ள அந்த மூலையில இருக்கிற கோழி வளக்கிற கொட்டிலப் பாருங்க... அது அஞ்சி வருசத்துக்கு முன்னம் இஸ்மான் கட்டினது... அதுவும் என்ட நெலத்தப் புடிச்சித்தான் கட்டியிருக்கு...."

மன்சிலின் மண்ணாசையை மனார்தீனின் இந்த வார்த்தைகளால் விஞ்ச முடியாமல் போயிற்று. காணியை விற்ற இஸ்மான் சொன்ன " மன்சில் சேர்... ஒரு அடி நிலம் இப்ப அவர்ர வளவுக்குள்ள இரிக்கி..." என்ற வார்த்தைதான் மன்சிலைக் குடிகொண்டு போதை பிடித்தவர் போலாக்கியிருந்தது.

"இல்லை... இல்லை... நான் சேவயர் ஒருவரக் கூட்டி வாறன்... ரெண்டு பேர்டயும் உறுதி சாமானுகள எடுத்து அளந்து வளவுகள்ட எல்லையைப் போடுவோம்...." மன்சில் உறுதியாகச் சொல்லிவிட்டார்.

"பொது வாகனங்களில் போகும் போது ஆசனத்தில் அருகருகே அமர்ந்து பயணிக்கும் போது மற்றவரின் ஆசனத்தை ஆக்கிரமிப்பதில் ஆசை அலுவலகங்களில் சக உத்தியோகத்தனின் கடமைகளில் தலையீடு செய்யும் ஆசை பொதுப்பணிகளில் ஈடுபடும் போது பொதுமக்களின் சொத்தினை பணத்தை அபகரிக்கும் ஆசை... இப்படியெல்லாம் மனிதன் ஆசைப்படுகின்றானே...." மனதிலே நினைத்து நெடுமூச்செறிந்தார் மனார்தீன்.

நில அளவையாளர் தனது வாகனத்தில் உதவியாளர்கள் உரிய உபகரணங்கள் சகிதம் வந்து இறங்கினார். அந்தக் கிராமத்தில் இப்படியாக நில அளவையாளர் வந்து காணியைப் பிரிக்கும் வழக்கம் அபூர்வமாக நிகழக்கூடியது என்பதால் அக்கம் பக்கம் நின்ற சிறுவர்கள் அவ்விடத்தைச் சூழ்ந்து கொண்டனர். பெரியவர்களிலும் ஒரு சிலர் தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இரு பக்க காணி உறுதிகளின் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை அறிந்து அளந்து உதவியாளர்களுடன் அடையாளமிட்டுக் கொண்டிருந்தார் நில அளவையாளர்.

எல்லைகளுக்கான முளைகளை அடித்து முடித்ததும் இரண்டு காணித்துண்டுகளையும் பிரிக்கும் புதிய எல்லை தற்போதுள்ள வேலியைத் தாண்டி இரண்டரை அடிக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். எம். எம். இப்றாகீம்

அப்பால் மன்சில் வாங்கிய காணிக்குள் இருந்தது. மன்சில் வாங்கிய காணித்துண்டின் மூலையில் அமைந்திருந்த கோழி வளர்க்கும் கொட்டிலின் காற் பங்கு மனார்தீனின் காணிக்குள் வந்தது.

மகுடியை ஊதி பாம்பை ஆட்டும் குறவன் பாம்பினை அடைத்துள்ள பெட்டியின் மூடியைத் திறந்ததும் வெளியே வரும் பாம்பு மகுடி இசைக்கு படமெடுத்து ஆடுவதைப் போன்று மன்சில் ஆடத்தொடங்கினார்.

"இல்லை... இல்லை.... இந்த அளவைய நான் ஏத்துக்க மாட்டேன்.... நான் கோட்டுக்கு போகப் போரேன்.... நான் வழக்குப் போட்டுத்தான் இந்த எல்லையைப் போடோணும்..." இப்படிச் சொல்லியவாறு ஆட்டம் போட்டார் மன்சில்.

"சேவயர்... நீங்க காணிய சரியா அளந்து சொன்னாச் சரி.... எல்லையில மதிலைக் கட்டுவம்... இந்த அரை அடி ஒரு அடிக் காணிய எடுத்து என்ன செய்யுற.... ஆறடி நிலந்தானே கடைசியில நமக்குச் சொந்தமாகிற...." காணியை அளப்ப தற்கு முன் இப்படிச் சொன்ன மன்சில்தானா இப்படி "பேயாட்டம்" போடுகிறார்" என்று ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் நில அளவையாளர்.

"நீ மேடைகளில ஏறி செய்த உபதேசங்கலெல்லாம் ஊருக்குத் தானா?... உனக்கு இல்லையா?" மன்சிலைப் பார்த்து இப்படிக் கேட்போமா என்று நினைத்தவாறு நடப்பதை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார் மனார்தீன். படமெடுத்தாடும் விசப்பாம்பின் தலையில் அடித்து சாக டிப்பது போன்று கையிலுள்ள மண்வெட்டியால் மன்சிலின் தலையில் ஒரு போடு போடுவோமா என்பது போல மனார்தீனின் இருபது வயது மகன் ஆத்திரத்தோடு காணப்பட்டான்.

தனது மகனின் கையிலிருந்த மண்வெட்டியை அவதானித்த போது அது மனார்தீன் சிந்தனையை கிளறிவிட்டது. மனார்தீனின் தந்தைக்கும் தந்தையின் சகோதரனுக்கும் அவர்களது பெற்றோரால் அன்பளிப்பாக பகிர்ந்தளிக்கப்பட்ட காணியின் எல்லையைப் பிரிப்பதற்கு மனார்தீனின் தந்தையும் தந்தையின் சகோதரனான சிற்றப்பாவும் உறவினர்களும் கூடியிருந்தனர். அப்போது மனார்தீனுக்கு வயது பதினைந் திருக்கும். அவனது தந்தை தனது காணிக்குரிய ஒன்றரை அடி நிலம் தனது சகோதரனின் காணிக்குள் இருப்பதாக பிடிவாதமாக இருந்தார். அவ்வாறு இல்லை என்று சகோதரன் வாதாடிக் கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில் ஆத்திரமடைந்த மனார்தீனின் தந்தை தனது கையிலிருந்த மண்வெட்டியை உயர்த்தி தனது சகோதரனைத் தாக்குவதற்கு முயற்சித்த போது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்களில் ஒருவர் அவர்களுக்கிடையே பாய்ந்து நடைபெறவிருந்த தாக்குதலை தடுத்துவிட்டார்.

"வாப்பா... ஒன்றரை அடி நிலந்தானே வாப்பா.... அது உங்கள் உடன் பிறந்த தம்பியின் காணிக்குள்ளதானே இருக்குது.... விட்டுத்தள்ளிவிட்டு இருக்கிற மாதிரி எல்லை யைப் போடுவோமே வாப்பா...." இப்படிச் சொல்ல மனார்தீன் முயற்சித்தாராயினும் அவரது சின்னஞ்சிறு வயது காரணமாக வார்த்தைகள் வெளிவரவில்லை.

ஈற்றில் கோடு கச்சேரி என்றெல்லாம் அலைந்து எல்லையைப் போட்டார்கள். ஆனால் இன்று அந்தக் காணித் துண்டுகள் இரண்டுமே மனார்தீனின் தந்தையிடமும் இல்லை. தந்தையின் சகோதரனிடமும் இல்லை. காலவோட்டத்தில் பல காரணங்களுக்காக அவற்றை விற்று விட்டனர். இன்று அந்த இரண்டு நிலத் துண்டுகளையும் யார் யாரோ ஆண்டு அனுபவிக்கின்றனர்.

"என்ன மனார்தீன் சொல்லுறீங்க... வழக்குப் போட்டு எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்போமா...." நில அளவை யாளர் அபிப்பிராயம் கேட்டபோது நாற்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவத்தின் நினைவிலிருந்து விடுபட்டார் மனார்தீன்.

"சேர்.... வழக்கு கணக்கு எல்லாம் வேண்டாம்... இந்த காணிப் பிரச்சினைகளுக்குப் பகைச்சிக் கொண்ட எத்தி னையோ பேர நான் என்ட சின்ன வயசிலயிருந்தே பார்த்தி ருக்கன்.... அவங்க அப்பிடி பிரச்சினப்பட்டு ஆண்டனுபவித்த எத்தனையோ சொத்துக்கள அவங்க உயிரோட இருக்கும் போதே இழந்து இப்ப புதிய தலைமுறைகள்தான் அந்தக் காணிசொத்துக்களையெல்லாம் ஆளுது. பிரச்சினப்பட் டவங்க எல்லாம் மண்ணோட மண்ணாப் போயிட்டாங்க... மன்சில் சேர் காட்டுற எல்லையில முளையை அடிச்சிடுங்க... அவர் சொல்லுற எல்லையிலயே மதிலைக் கட்டுவம்.... இந்த இரண்டடி மூண்டடி நிலத்துக்காக சண்டை சச்சரவுகள் வேணாம்...." இப்படிச் சொன்ன மனார்தீனை அனுதா பத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார் நில அளவையாளர். அவரைச் சுற்றியிருந்த அயலவர்களும் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் செ. யோகராசா



# மஞ்சரி சிறுகதைகள்

## ஒரு பார்வை

பேராசிரியர் செ. யோகராசா

மஞ்சரி 28

### நசுங்கிப் போகும் உணர்வுகள் :

**கமலினி கதிர்**

குடும்பத்திலுள்ள மனைவியோ கணவனோ நோயுற்று கோமா நிலைக்குள்ளாவதோ வேறு நிரந்தர நோய்குள்ளாவதோ சகஜமாயினும் அது பற்றிப் படைப்புகள் அரிதாகவே வெளிவருகின்றன. இவ்விதத்தில் மறதி நோய்க்குள்ளான மனைவிபற்றியும் அவளது கணவனது மனஉணர்வுகள் பற்றியும் நுட்பமாகச் சித்தரிக்கும் ,இச்சிறுகதை வித்தியாசமான பேசு பொருள் காரணமாக மட்டுமன்றி வெளிப்பாட்டு முறை காரணமாகவும் பாராட்டிற்குரியதாகின்றது.

### அதிர்வலைகள் :

**செ. ஜனனு ஜனன்**

சிலவருடங்களுக்கு முன்னர் யாழப்பாணப் பிரதேசத்தில் பேரச்சத்தை ஏற்படுத்திய 'கிறீஸ் மனிதன்' பற்றி எழுந்துள்ள இச்சிறுகதை அதனை வித்தியாசமான புதியதொரு பார்வையில் சிங்கள, தமிழ் உறவு அணுகுவதால் கவனத்திற்குரியதாகிறது. நீட்சியைக் குறைத்திருப்பின் நன்றாகவிருந்திருக்கும்.

### எதிர்பாராதது:

**சம்பூர் சமரன்**

பேசுபொருள் தாயின் பாரமரிப்பிலிருக்கும் படிக்கின்ற மகன் போகாத இடம் நோக்கி போவது பழையது. வித்தியாசமான முடிவினால் அதாவது கதாசிரியர் தலையீடின்றி மகன் தன்நிலையுணர்ந்து திருத்திக் கொள்வது காரணமாக புதியது போன்றிருந்தாலும் வாசகர் ஊகிக்கக் கூடியவிதத்தில் முடிவு அமைந்துவிட்டது. ஆதலின் மேன்மேலும் செப்பனிட வேண்டியுள்ளது.

### ஜன்னல்:

**மனால்**

சிறிய கதையாகவிருப்பினும் 'குறுங்கதை' யாகாமல் சிறுகதையாக உருவாகியுள்ளது வித்தியாசமான கருவும் தெளிவான எடுத்துரைப்பும் இப்படைப்பினை கவனத்திற்குரிய தாக்கியுள்ளன.

### தைலப்பெட்டி :

**ஏ.பி முகம்மது**

தமிழ் பேசும் சமூகத்தினரது வீடுகளில் ஒரு காலத்தில் முக்கியம் பெற்று விளங்கிய பாவனைப் பொருள் இத்தலைமுறை அறியாதது. இவ்விதத்திலும் பண்பாட்டு பதிவு என்ற விதத்திலும் மட்டுமன்றி கதாசிரியரின் படைப்புத்திறன் காரணமாக இன்னொரு தளத்திற்கும் வியாபித்து சிறந்ததொரு சிருஷ்டியாகியுள்ளது. அதாவது மூத்ததலைமுறையை மறைமுகமாக உணர்த்துவதாகவும் அமைந்திருக்கின்றது. அதுகூட ஒரே ஒரு வாக்கியத்தினால் 'எழுத்தாளன் நெலமயும் இப்பிடித்தான் எனக்கு அத நெனச்சி அவன் ஒரு பெருமூச்சுவிட்டான்' வெளிப்படுத்தப் படுவது குறிப்பிடத்தக்கது முடிவுமட்டுமன்றி ஆரம்பமும் சிறப்பாக அமைந்துள்ளது. பாராட்டுக்கள்.

### முடிந்தவாழ்க்கை மீள்வதில்லை:

**தீபதிலகை**

தமிழ்க் குடும்பங்களின் சிதைவிற்குக் காரணமானதொரு பிரச்சினை குடும்பத்தவரில் யாரோ ஒருவர் தமது வீட்டாருக்கு அடிக்கடி உதவிகள் செய்ய முற்படுவது பேசு பொருளாகியுள்ளது. வித்தியாசமான முடிவினால் கவனத்திற்குரிதாகியுள்ளது.

### 'மிஸ்..யூ..டடா' :

**எம். சீ.யே பரீட்**

தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு தாயகத்திலிருந்து மன அவலத்திற்குள்ளாகும் பெற்றோர் பற்றி பல படைப்புக்கள் வெளிவந்துள்ளன. எனினும் பேசு பொருள் வித்தியாசமான முறையில் வெளிப்பட்டிருப்பதனாலும் சிறுகதையின் கனகச்சிதமான தலைப்பினாலும் பாராட்டிற்குரியதொன்றாகி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தூவானம் -
### நிலாவெளியூர் கெஜ-தர்மா

சாதிப்பிரச்சினை வித்தியாசமான முறையிலும் வெகுநுட்ப மாகவும் அணுகப்பட்டுள்ளது. இவ்வித்தில் முக்கியமான கவனிப்பிற்குரியது.

### சிறப்புசிறுகதை:
### வெக்கங்கெட்டவர்கள் -
**அ. யேசுராசா**

தமிழ்க் குடும்பங்களில் புரையோடிப்போயுள்ள பிரச்சினை யொன்று பொருளாதார அந்தஸ்தில் குறைந்த நிலையுள்ளமை காரணமாக உயர்அந்தஸ்த்திலுள்ள உறவினர்கள் அவர்களை ஒதுக்கிவைத்தாலும் தேவையேற்படின் ஒதுக்கி வைக்கப்பட்ட வர்களை நாடிச்செல்வதும்-சிறப்பான சிருஷ்டியாக உருவாகி யுள்ளது. எடுத்துரைப்பு முறைச்சிறப்புக்கள், கதைப்பின்னல், உரையாடல்முறை, மொழி நடை இளம் எழுத்தாளரின் நிதானமான வாசிப்பிற்குரியவை.

### மேலதிக குறிப்புகள்
### நந்தினி சேவியர் நினைவிதழ் பற்றி

மஞ்சரியின் வெளியீட்டு முயற்சி வித்தியாசமானது என்பதை அட்டைப்படமே (உள்ளே உள்ள புகைப்படங்களும்) வெளிப்படுத்துகின்றது. அதாவது அதிகம் பிரசுரமாகாத வித்தியாசமான தத்ருபமான தோற்றங்களில் நந்தினி சேவி யரைக் கண்டு கொள்கின்றோம். அவரது அனைத்துவிடயங் களையுமே தேர்வுக்குள்ளாக்கி முக்கியமான பகுதிகளை மட்டுமே தந்திருப்பது மற்றொரு சிறப்பு உதாரணமாக நேத்திரா நேர்காணல் பகுதி நந்தினி சேவியரின் உன்னதமான சமூகப் பார்வையையும், துணிச்சலையும், மொழிவீச்சையும் வெளிப்படுத்துகின்றன. நந்தினி சேவியர் தனது படைப்புக்கள் கலாபூர்வமான முறையில் அமைந்திருப்பதற்கான காரணத் தையும் ( மா.வோவின் ஜெனான் கருத்தரங்குவரை) மூத்த தலைமுறை அழகியல்வாதிகள்கூட அவ்விடயம் பற்றி அறிந்திருந்தமையையும் அவ்விதத்தில் இத்தலைமுறையினரின் அறியாமையையும் மனந்திறந்து வெளிப்படுத்துவதை எடுத்துக்காட்டுகிறது. நண்பர்களின் நினைவுகூரலும் வெவ்வேறு நோக்கிலும் போக்கிலும் வெளிப்பட்டுள்ளன. பாராட்டுக்கள்.

### கே. எஸ். சிவகுமாரன் பற்றி

மனநெகிழ்ச்சி தரும் முகநூல் மீள்பதிவு எனக்கும் சிவகுமார னுக்கும் இடையிலான உறவு பேராசிரியர் கைலாசபதி வீட்டிலிருந்து எழுபதுகளில் ஆரம்பித்தது. முதன்முதலாக அவரை விமரசகராக அங்கீகரித்தவர் நான் என்று அடிக்கடி கூறுவார். முக்கியமான சிலர் அங்கீகரிக்காமைக்குரிய காரணம் பற்றி எழுத்து வடிவில் அவை வெளிப்பட்டமையும் நூல்வடிவில்இடம்பெற்றமையும், இடது சாரி எழுத்தாளர்கள் சிலரை கடுமையாக விமர்சித்தமையும் அவரது அசாதாரண எரிச்சல் தரக்கூடிய பணிவுச் சுபாவமுமே என்பது எனது அபிப்பிராயம். பேசு நிலையில் அலைபேசியில் கூறியது தன்னைப்பற்றி எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும் ஆசை உண்டு என்பது. எனது ஒரு கட்டுரை அவரது நூல் ஒன்றின் முன்னுரையில் உள்ளது. திறனாய்வு, நூல் விமர்சனம்பற்றி நான் எழுதியதை பற்றி அறியவில்லை என்றார். வெளியீடுகளில் ஈடுபடுவோர் இருப்பின் என்னுடன் தொடர்புகொள்க. ஆரம்ப புதுக்கவிதை கவிஞர்களில் இவரும் ஒருவர். கவிதை, மொழிபெயர்ப்பாளர் என்பன பலர் அறியாதன. கிழக்கிலங்கை விமர்சகர்கள் என்ற தலைப்பில் தெ.கி பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட முது தத்துவமானி ஆய்வொன்றில் கே. சிவகுமாரனும் உள்ள டங்கியுள்ளார்

## நம்பிக்கை

எனது நண்பர்களில் பூத பிசாசுகளை நம்புபவர்கள் சிலர் இருக்கிறார்கள். இறந்து போனவர்களுடைய ஆத்மாக்கள் அவர்கள் சரீரங்களிலிருந்து வெளியேறி ஆவியுலகில் நம்மைச் சுற்றித் திரிந்து கொண்டிருக்கின்றன என்பதும் அந்த ஆவிகளோடு பேசக் கூடிய சக்தி படைத்த மஹானுபவர்கள் இருக்கிறார்கள் என்பதும் அவர்களது நம்பிக்கை. என்னைப் பொறுத்தவரையில் இந்த ஆத்மாக்கள் என்கிற கூற்றில் நம்பிக்கை கிடையாது அப்படிப் பட்டவன் எப்படிப் பேய் பூதங்களைப் பற்றியும் ஆவியுலகைப்பற்றியும் நம்பமுடியும்?

**ராகுல சாங்கிருத்தியாயன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. தயாளன்



# சிறுகதை எழுதுவது எப்படி?

## உங்களை நீங்களே பரீட்சித்தல்

ஒரு கதையை எழுதியபின்பு அது திருப்தியாக உள்ளதா என முதல் வாசகனாகிய நீங்களே உங்களைப் பரீட்சிக்க வேண்டும்.

உங்கள் கதையின் இரு பந்திகளை எடுத்துவிட்டு மீளவும் வாசித்துப்பாருங்கள். அது உங்களுக்குத் திருப்தி தருகிறதா என்று பாருங்கள். உங்களுக்குத் திருப்தி தருமாயின் அதனை உங்கள் நண்பரிடம் கொடுத்துப் படிக்க வையுங்கள். அந்த உங்கள் நண்பர் எழுத்தாளராக இருந்தால் நல்லது. இதற்காகத்தான் எழுத்தாளர் வட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இப்படியான ஒன்றில் உங்கள் கதையைப் பதிந்து அபிப்பிராயம் கேளுங்கள். இந்த முறை நிச்சயமாக நல்ல ஒரு கதையைத் தோற்றுவிக்கும்.

## வாசிக்கத் தூண்டுதல்

ஏற்கனவே கூறியபடி கதையின் ஆரம்பம் வாசிக்கத் தூண்டுவதாக அமைந்திருந்தாலும் அதற்குப் பின்பு வருகின்ற காட்சிகள் வாசகனுக்குத் தொடரவேண்டிய ஆர்வத்தை உண்டுபண்ண வேண்டும். கதையின் ஓட்டத்தில் வரும் வசனங்கள் கதையின் முடிவை நோக்கி வழிகாட்டு பவைகளாக உள்ளனவா? அல்லது ஆச்சரியங்கள் நிறைந்த னவாக உள்ளனவா? என்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

சம்பவங்கள்தான் பெரும்பாலும் கதைகளாக அமை கின்றன. ஆனால் வெறுமனே சம்பவத்தை அப்படியே கூறுதல் கதையாகாது. இதனை நேர்கோட்டில் அமையும் சம்பவங்கள் எனச் சொல்லலாம்.

இப்பொழுது எமது சிந்தனை கதை என்பதற்கும் நேர்கோட்டில் அடுக்கப்பட்ட சம்பவங்கள் என்பதற்கு மிடையிலான வித்தியாசங்கள் என்ன என்பதில் வந்து நிற்கிறது.

பாடசாலைக் காலத்தில் விடுமுறை நாட்களில் என்ன செய்தீர்கள் என்பதை எழுதுங்கள் என்று ஆசிரியர் கூறும்போது 'நான் பஸ்வண்டியில் பயணம் செய்தேன் பின்பு ....... என்னுமிடத்தில் இறங்கித் தேனீர் குடித்தேன் பஸ் வண்டி வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அரை மணித்தியாலத்தின் பின் வீடு வந்து சேர்ந்தேன்.'

இப்படி எழுதும் போது அது நேர் கோட்டிலுள்ள சம்பவங்களாகவே தெரிகிறது. ஆனால் பஸ்சில் செல்லும் பொழுது பஸ்சுக்குள் நடந்த சில சம்பவங்கள் ஆச்சரியம் மிகுந்தவையாக இருந்து முடிவு எதிர்பாராத ஒன்றாக மாறும் போது அது கதையாகிறது.

அதாவது நேர்கோட்டில் அடுக்கப்பட்ட சம்பவங்களுக்கும் கதைக்குமிடையில் முக்கியமான ஒன்று உள்ளது. அதுதான் 'கரு'. இந்தக் கருதான் இரண்டையும் வேறுபடுத்தி நிற்கிறது.

## திட்டமிடலுக்கும் கருவிற்குமிடையிலுள்ள வேறுபாடு

திட்டமிடல் என்பது கதைபற்றி நீங்கள் போடுகின்ற வெளிவட்டமாகும். இதுவும் ஒரு கதைக்கு மிகவும் அவசியமாகும். இதனைத் திட்டமிடல்' என்றும் கூறலாம். இத்திட்டமிடல் ஒரு முடிவை நோக்கியும், போகும் வழியில் ஆச்சரியங்கள் நிறைந்ததாகவும் இருப்பின் அது கதையாகின்றது. ஒரு நல்ல கரு என்பது முடிவில் நல்ல முடிவைத் தருவதாகும்.

பயிற்சிகளின் போது அனுபவத்தின் செறிவு காரணமாக ஒரு எழுத்தாளன் நல்ல கருவைத் திட்டமிட்டுவிட்டால் அது எவ்வளவு நீளமாக இருக்கும் என்பதையும் எதிர்வு கூறிட முடியும்.

நீங்கள் எடுக்கும் பிரச்சினையின் சமூக முக்கியத்துவமே கதையின் வெற்றியைத் தீர்மானிக்கிறது. அது 1000 சொற்களாகவும் இருக்கலாம் அல்லது 2000 சொற்களாகவும் இருக்கலாம்.

அடுத்த இதழில் ஒரு கதையை வைத்து மேலே கூறியவற்றை ஆய்வு செய்வோம்.

(இன்னும் வரும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. KUGAN
78, 2nd LANE
ANANDAPURI
TRINCO


LUXMI EDUCATION CENTRE

# LEC

## ENROLLING NOW
2022 / 2023



**REGISTER NOW**

www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அற்புதமான அழகுமிகு
வடிவங்களில் குறைந்த
விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது
வெஸ்டேர்ண் ஜுவல்லர்ஸ்.

# WESTERN
JEWELLERS

Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, HA0 4YA

**SPECIALISED IN 22ct GOLD, WHITE GOLD, PLATINUM & DIAMOND JEWELLERY**

Tooting Branch:
230 Upper Tooting Road
London, SW17 7EW

## SILK EMPORIUM

122 Upper Tooting Road
London, SW17 7EN

FIRST JEWELLERY SHOP IN UK

WWW.WESTERNJEWELLERS.COM
TEL : 020 8903 0909



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org